64

கர்த்தா
கர்த்தா } வை. மு. கோதை நாயகி அம்மாள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 JUL 1926
MADRAS

# JEGAN MOHINI

# ஜெகன்மோகினி

மலர் III 1926 இதழ் 7.



ர் மோகினி ஆபீஸ்,
26 தோடித் தெரு,
திருவல்லிக்கேணி மதராஸ்.

Jc
N211, N22 J.m
N26.3.7
182825

குறிப்பு:—ஒவ்வொருமாதமும் கடைசித்தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

# அமிர்தாஞ்சனம்

அமிர்தா ஞ்சனம்

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணு 10 ரூ. 0-10-0




இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங் செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்சனமே.
தலை வலி, முதுகு வலி, கீல் பிடிப்பு முதலிய
சகல நோய்களையும் நொடிப்பொழுதில்
தீர்க்கும்.

**உடனே முந்துங்கள்.**

மோஹினி தைலம்.
பாட்டில் 1-க்கு 0--12--0

படைமருந்து
டப்பி 1-க்கு 0--6--0

பல்பொடி
டப்பி 1-க்கு 0--2--0

**எல்லா கடைகளிலும் கிடைக்கும்.**

**அமிர்தாஞ்சன் டிபோ,**
**7. தம்புச்செட்டி வீதி, சென்னை.**

3 -JUL 1926
MADRAS

## 9 - வது அதிகாரம்.

அம்புலிகாணு ஆம்பல்—புலியைப்பிடித்த எலி.

மூன்ருவது அதிகாரத்தின் இறுதியில் செஞ்சிக்கோட்டை ஜெமீந்தாரும் அவரது அன்னையும் பெட்டி வண்டியோடு வைதேகியைத் தேடித்திரிந்து எங்கும் காணுமையால் வாட்டமடைந்து, மனமுடைந்து, அவள் எந்தப்போலீஸ் ஸ்டேஷனிலும் காணப்படவில்லேயே, வேறு எந்த இடத்தில் இருப்பாள் என்று வருந்திக்கொண்டே இருந்ததாக நிறுத்திஞேமல்லவா? பிறகு அவர்களுடைய கதி என்னவாயிற்றென்பதைக் கவனிப்போம். அன்று முழுமையும் அவர்கள் பெட்டி வண்டியில் இருந்தபடியே இன்று எப்படியாகிலும் வைதேகியைக்கண்டு பிடித்தே தீரவேண்டும் என்ற சபதத்தோடு பட்டணத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷன்களிலெல்லாம் நேரில் போய் சில இடத்தில் பார்த்தும், டெலிபோன் மூலமாய் விசாரித்தும், மாலே 5-மணி வரையில் அலேந்தார்கள். எங்கும், எந்தப் போலீஸ் ஸ்டேஷனிலும் முதல் நாளிரவில் சிறு பெண்பாலேக் கைதுசெய்யவே இல்லே என்று கூறிவிட்டார்கள். என்ன செய்வார்கள் பாவம்! இளேய ஜெமீந்தார் தமது தேக நிலேமையைக்கூட கவனிக்காமல் அவளே எவ்விதமாகிலும் தேடிப்பிடித்துவிட்டுத் தான் மறுகாரியம் செய்யவேண்டும். அவளே மறுமுறை பார்த்தாலே தமது தேகப்பிணியும் மனப்பிணியும் நீங்கிவிடும் என்று ஒரே மூர்க்கமான எண்ணத்தை மனதில் வைத்தவரா யிருந்தமையால் அவருக்கு அந்த விந்தையான செய்தியைக் கேட்டதும் மனக்கலக்கம் அதிசரித்துவிட்டது. என்ன செய்வதென்று தோன்றவில்லே. அவர் தமது காலில் அடிபட்டதஞல் ஏற்பட்ட பாதையையும் மறந்தார். முதல் நாள் தாம் கண்ட பெண் மணியாகிய வைதேகியின் மீதிலேயே தம் மனத்தைச் செலுத்தியிருந்தாராதலால், அவர் விசாரித்த இடத்திலெல்லாம் இல்லே இல்லே என்ற சொல்லேத்தவிர வேறு சொல்லேக்கேட்காமையால், அவர் மனம் கட்டுக்கு மீறிக்கலங்க வாரம்பித்தது. அன்று அவர் எப்படியாவது அந்த வைதேகியைக் கண்டுபிடித்து விடலாம் என்று வைத்திருந்த

நம்பிக்கையெல்லாம் ஏமாற்றமாய்விட்டதை எண்ண, அவர் மனதில் இன்னதென்று விவரிக்க இயலாதவிதமாய் ஒருவேதனை வந்து கப்பிக்கொண்டது. ஒரு வருஷத்திற்கு முன் இறந்துபோன தமது மனையாட்டியான அமிர்தவல்லியின் நினைவு சதா இரவு பகலாய் அவர் மனதில் குடிகொண்டு அகக்கண்ணிற்குத் தோன்றித் தோன்றிக் காக்ஷிகொடுத்து வதைத்துக்கொண் டிருந்ததன் பிரதிபிம்பம்போல மற்றொரு அமிர்தவல்லியைத் தாம் நேரில் காணவும், அவளால் தமக்கு வந்த ஆபத்து சிறிது நீங்கவும், தம்பொருட்டு அவள் பற்பல கஷ்டங்களை அனுபவித்ததாகக் குழலோ, யாழோ, கோகிலமோ எனத் தரும் தனது குரலால் அந்த மெல்லியலாள் மொழிந்ததைக் கேட்கவும் நேரிட்ட அற்புத சம்பவத்தை எண்ண எண்ண, அவர் மனதில் அவளிடத்தில் தம்மை யறியாமலேயே ஒருவிதப் பற்றும் பிரியமும் ஏற்பட்டு உத்தரக்ஷணத்தில் பசுமரத்தாணிபோல ஊடுருவிப்பாய்ந்துப் பதிந்துவிட்டபடியால், அவர் அந்தச் சம்பவத்தை ஓர் இமைப் பொழுது கூட, மறக்கவே முடியவில்லை. முந்தின நாள் இரவில் நடந்த சம்பவங்களெல்லாம் அப்போதே அவர் கண்ணுக்கு அந்தப் பெட்டி வண்டிக்குள்ளேயே நடைபெறுவது போலத் தென்பட்டுக் கொண்டேயிருந்தன. வைதேகி தன் புஷ்பம்போன்ற மிருதுவான கரத்தால் தன் காலைத்தூக்கி, கரிப்பொடி வைத்துக்கட்டியபோது அவர் பேசத்திறனற்று இருந்தாரேயன்றி, அங்கு நடந்தவைகளெல்லாம் அவரது நினைவிற்கு நன்றாய்த் தெரிந்தனவாகையால், அவர் அந்தச் சம்பவத்தை எண்ணும்போதெல்லாம் வைதேகியினுடைய அழகிய கரம் தம்மேல் படுவதுபோலத் தோன்றியது. உடனே அவர் தேகம் அவரை யறியாமலேயே ஒருவிதமான பூரிப்பால் திடுக்கென்று ஆநந்த மயிர்க்கூச்செறிவதை அவர் பக்கத்திலிருந்த அவர் தாயார் அடிக்கடி கவனித்துக்கொண்டே இருந்தாளாகையால் அந்த அம்மாள் அவ்விதம் அவரது உடம்பு நடுங்குவது காலில்பட்டுள்ள காயத்தின் வலியால் என்று வெகுநேரம் வரையில் எண்ணியவளாய் அதைப்பற்றி அவரிடம் எதுவும் கேட்காமல் எப்படியாகிலும் அவர் கோரிய பெண்ணைத் தேடிப்பிடித்துவிட்டால் போதும் என்று எண்ணி இருந்தாள். பொழுது ஏற ஏற அவர்களுக்கு நல்ல சமாசாரம் கிடைக்காமல் கெட்ட செய்தியே கிடைத்துக்கொண் டிருந்ததனால் உண்டான

18282S

மனக்கிலேசத்தினுல் இருவரும் உலப்பப்பட்டவர்களாய் ஒருவரோ டொருவர் என்ன பேசுவதென்பதை யறியாது துயரமே வடிவாய் அமர்ந்திருந்தார்கள். இளைய ஜெமீந்தாருக்கோ மனவேதனை விஷம் தலைக்கேறுவதுபோல நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரித்துக்கொண்டே செல்லச்செல்ல வைதேகியின் வீட்டு வாசலில் தாம் விழுந்ததுமுதல் ஒவ்வொன்ருய் அவர் கண்ணிற்கு நாடக மேடையில் கண்ணெதிரில் பார்க்கும் நாடகம்போலத் தோன்றுகின்றது. அந்த நாடகத்தில் வைதேகி தன்னைத் தீண்டிய பாகத்தை உணரும்போதும், அவள் மான்போல மருளமருள விழித்துக்கொண்டு நின்றபோதும், அன்னம் போலும், பெண் யானைபோலும், அசைந்தாடும் மயில்போலும் அவள் நடந்துசென்ற காட்சியை நினைக்கும்போதும், அவள் கனிரென்று தன்னை "ஐயா ஐயா" என்று அன்பொழுக, அகமகிழ அழைத்ததை எண்ணுந்தோறும் அவர் தேகம் திடும் திடும் என்று ஆடி மயிர்க்கூச் செறிந்ததைக் கண்ட அவர் தாயார் வெகுநேரம் பொறுத்திருந்து பார்த்தாள். அம்மாதிரியான நடுக்கம் சற்றும் குறையாமல் அடிக்கடி வந்துகொண்டே இருக்கவே, அந்த அம்மாளுக்குப் பயமெடுத்துக் கொண்டது. அவள் மனத்தில் மிகவும் திகில் கொண்டவளாய் அடியில் வருமாறு சிந்திக்கலானுள்.

"ஆஹா! நாம் துயரப்படுவதற்கென்றே இந்தஜென்மத்தைஎடுத்து விட்டோமே! ஐயோ! இவ்வித அபாக்யவதியும் உலகிலிருப்பாளா? எவ்வளவு செல்வமிருந்தென்? சிறப்பிருந்தென்? மனதிற்கு அமைதியில்லாத ஜென்மம் எதற்கு? ஒரு பெண்ணையும் ஒரு பிள்ளையையும் கண்க்காகவும் அழகாயும் கொடுத்த ஈசன் அதனுல் நாம் களிப்படைந்து நம்முடைய காலத்தைக் கடத்தும் வண்ணம் அருள்புரியாமல் அவர்களால் என் ஆயிசுகால பரியந்தமும் துயரக்கடலிலேயே மூழ்கி எழுந்திருக்க வழியறியாது இப்படியும் புலம்பும்படியான விதியையா என் தலையில் எழுதவேண்டும்? ஐயோ! இந்த ஜென்மம் எடுத்தநாள் முதலாய்த் துயரமனுபவித்துத்தான் சாகவேண்டும் என்று விதித்துவிட்ட ஈசன் என் அருமைக் கண்மணி, ஆருயிர்ப் பெண்மணியான அமிர்தவல்லியை அழைத்துக் கொண்டவுடன் என்னையும் தன்னடியில் சேர்த்துக்கொள்ளக் கூடாதா! இந்த மிச்ச விசனங்களையு மனுபவிக்க வேன் வைத்து என்னை ஆட்டவேண்டும்? அந்தோ! நான் என் அமிர்த

கலசத்தைத் தோற்றுவிட்டபிறகு மறுபடி நம் மகனை நல்ல மணக் கோலத்தோடு பார்க்கப் போகிறோமா என்று கவலையுற்று அவன் கொண்டிருந்த விரக்தியைக் கண்டு கலங்கி, அல்லும் பகலும் அனவரத மும் சிந்தனைக்கடலில் மூழ்கி மீளவழி யறியாது தவித்துத் தண்ணீரா யுருகி சஞ்சலக்கடலில் ஆழ்ந்து, துயரமென்னும் நீரை வயிறு நிறை யக் குடித்துத் திணறியிருந்த காலையில், பெரிய இடியே தலையில் விழுவதுபோல என் மகனுக்குத் திடீரென்று ஆபத்து நேர, இறந்தவர் பிழைக்க அமிருதசஞ்சீவி கொடுப்பதுபோல, இறந்துபோன அமிர்தவல்லிபோன்ற ஒரு பெண் அவனுடைய கண்ணில் பட, அவளைக் கண்டதும் அவனுடைய விரக்தி நீங்கித் தெளி வடைய, அவன் தனது தேகபாதையையும் கவனிக்காமல் அவளை மறுபடி காணவேண்டுமென்று ஆசைகொள்ள, அதைக் கண்டு நான் ஆனந்த பரவசமடைந்து அவனை அழைத்துக்கொண்டு, அவளுடைய வீட்டிற்குப் போனால், அவள் இப்படி மாயமாய் மறைந்துபோய்விட் டாளே! இது ஆச்சரியமும் அநியாய மானதுமான சேதியாயிருக் கிறதே! நேற்று முதல் அன்னம் தண்ணீரில்லாமல், அடிபட்டு வருந்தியதாலும், காலை முதல் வியாகுலத்தோடு தேடி அலைந்து அவ ளைக் காணுமையினாலும் ஏற்பட்ட கலக்கம் அவனை அவ்விதம் சற்று நேரத்திற்கொருதரம் நடுங்கச் செய்கின்றதோ! ஹா! ஈசா! நேற்றிர வோடு என் மைந்தனின் துயரம் நீங்கிவிட்டதென்று எண்ணி இருந்த என் எண்ணத்தில் உடனே மண்ணைப் போட்டுவிட்டாயே! அவனும் சுகித்து பாவியாகிய நாமும் அதைக் கண்ணால் பார்க்கப் போகிறோமா என்று எண்ணி இருந்த எனக்கு, கண்ணைக் கொடுத் துக் காட்டி உடனே பிடுங்கிக் கொள்வதுபோல அவன் மனதிற்கு உகந்த மங்கையின் வடிவத்தைக் காட்டி இவ்விதமா மோசம் செய் வது? ஐயோ! உயிரற்ற உடல்போல சிந்தையில் சொல்லறியா எண் ணங்களைச் சிதறவிட்டவனாய் வாய் பேசாது கண் கலங்கப் பரதேசி போல உட்கார்ந்திருக்கும் என் மகனது பரிதாபத்தைக் கண்டு என் னால் சகிக்கமுடியவில்லையே! ஆ! அந்த மடமயிலாள் எந்த விடத்தி லிருக்கிறாள் என்பதை மாத்திரம் எங்களுக்குத் தெரிவித்துவிட்டால் என் பையன் களியுறும்பொருட்டு எங்கள் ஜெமீன் முழுவதும் போவ தானாலும் பொருட்படுத்தாமல், அந்தப் பெண்ணைக் காப்பாற்றிக்

கொண்டுவந்து விடுவோமே. இந்த உபகாரம் யார் செய்யப் போகிறார்கள்? என்ன காரணத்தினால் அவனுடைய தேகம் அவ்விதம் ஆட வேண்டும் தெரியவில்லையே" என்று பற்பல நினைவுகளைக்கொண்டு கலங்கியவாறு, தன் மகனை நோக்கி, மெதுவாகப் பேசத்தொடங்கி "அப்பா! தம்பீ! உனக்கு உடம்பு என்ன செய்கின்றது? உன் தேகம் ஏன் இவ்விதம் கொஞ்ச நேரத்திற்கொரு முறை ஆடுகின்றது? இதைக் காண எனக்கு மிகவும் வருத்தமாக விருக்கின்றதே. உன் காலின் வலியால் அவ்விதம் ஆடுகின்றதா? அல்லது ராத்திரிமுதல் ஆகாரமில்லாமையால் ஏற்பட்ட பலஹீனத்தினால் இப்படி ஆடுகின்றதா? ஒன்றும் தெரியவில்லையே. உடம்பு என்ன செய்கின்றது தம்பீ?" என்று வாஞ்சை ததும்ப, அன்பொழுக வெகு வினயமாய்க் கேட்டாள்.

இளைய ஜெமீந்தாரோ தன்னையே மறந்து வைதேகி பேசியதையும், அவள் தன்னிடம் காட்டிய பரோபகாரச் சிந்தையையும், தனக்காக அவள் பட்ட பாட்டையும், அடைந்த துன்பங்களையும், அவளுடைய அதியற்புதமான சுந்தரலாவண்ய மனமோகன சிங்கார ரூபத்தையும் தன் மனதில் பதிவு செய்துகொண்டு அதைத் தன் அகக்கண்ணால் பார்த்துப் பார்த்துப் பரமானந்தமடைவதும், பிறகு உடனே அது உருவெளித்தோற்றம் என்று தம்மையே தாம் தேற்றிக்கொள்வதுமாய் மனமாகிய கடலில் எண்ணறியா எண்ணமாகிய அலைகள் வந்து சடேர் சடேர் என்று மோதி மோதி யடித்துப் புரண்டுவந்து உடைந்து போவதும், மறுபடி பெரிய அலைகள் கொந்தளித்துக்கொண்டு வருவதுமாய் அவர் தத்தளித்துக் கொண்டிருக்கையில் ஒரு போலீஸ் ஸ்டேஷனை யடைவதும் அங்கு இடி இடித்ததுபோலான சமாசாரத்தைக் கேட்டதனால் உண்டான கலக்கத்தால் உலப்பப்படுவதும், "ஆஹா நாம் மறுபடியும் அந்த அற்புத வனிதையின் த்வனியை இக்காதால் கேட்போமா? அவள் மான்போன்ற மருண்ட பார்வையை மறுமுறை காணும் பாக்கியம் பெறுவோமா? அந்தோ! நமக்காக எவ்வளவோ அரும்பாடுபட்ட அருங் குணமணியா, தப்பான வேலை செய்து சிறைக்குச் சென்றிருப்பாள்? அது ஒருநாளுமில்லை. அதை நிச்சயமாய்ச் சொல்லுவேன். மேலும் அவள் போலீஸ் ஸ்டேஷன்களிலில்லாமல் வேறு எங்கே இருப்பாள்? இதுதான் நிரம்பவும் சந்

தேகத்திற்கிடமாக இருக்கிறது. அவளை எவ்விதமாகிலும் தேடிப் பிடிக்காமல் விடுகிறதில்லை என்று பலவாறாய் எண்ணமிட்ட வண்ணமாய் இருக்குந் தருணத்தில் அவரது அன்னைக் கூறிய வார்த்தைகள் காதில் படவே அவர் தம்மை ஒருவாறு தேற்றிக்கொண்டு மெல்லப் பேசத்தொடங்கி, "அம்மா! தாங்கள் ஏன் கவலைப்படவேண்டும்? எனக்கு உடம்பில் ஒன்றுமில்லை. முற்றிலும் குணமாய்விட்டது. காலில் ரணமிருப்பதுகூட எனக்கு நினைவில்லை. எனக்கு இந்த ஆச்சரியமான சேதிதான் மனத்தில் பாதிக்கின்றது அம்மா! அந்தப் பெண்ணைத் தாங்கள் நேரில் கண்டு நான் சொல்வதன் உண்மையை அறிந்து கொள்ள வேண்டுமேயன்றி அதை நான் எவ்விதமாகச் சொல்லுவேன்? சொல்வதற்கு ஒன்றா, இரண்டா? இறந்துவிட்ட நம்முடைய அமிர்தவல்லிதான் அவள் என்ற பிறகு அதிகம கூறவேண்டுமா? ஆஹா! அவளுடைய ஜீவகாருண்ய குணத்தழகு ஒன்றே அவள் இவ்வித குற்றமான தொழிலில் இறங்கமாட்டாள் என்பதற்கு நிதர்சனமாக விளங்குகின்றதே! அங்ஙனமிருக்க, அவள் ஒரு கிழவியைக் கொலை செய்ய எத்தனித்தாள் என்று அவள்மீது குற்றம் சாட்டியது ஏதோ மோசக்கருத்தோடு பிறர் செய்ததாக இருக்கிறதேயன்றி வேறல்ல. அவளுடைய காலில் ஒட்டிய தூசியும் அவ்விதம் நினைக்காதென்றால் வேறு பேச்சு எதற்கு அம்மா? என்னை அன்புடன் பெற்ற தாயாகிய தங்களிடமல்லாது நான் என்மனத்தை யாரிடம் வெளியிடுவேன்? எனக்குத் தேகத்தில் பாதை யாதொன்றுமில்லை. என் மனத்தைக் கொள்ளைகொண்ட அந்தப் பைங்கிளியை மறுமுறை பார்த்த பிறகே என் ஆவி நிலைக்கும். இதன் பொருட்டாக நான் ஆயிரமில்லை. லக்ஷம் பத்துலக்ஷமாயினும் செலவழித்து அந்த அபலையை, என்னைக் காப்பாற்றிய காரிகையை, நான் கண்டு பிடிக்காமல் விடுகின்றதில்லை. அம்மா! இதற்கு உங்களுடைய ஆசீர்வாதம் ஒன்றுதான் வேண்டியது. என்னை இந்த ஒரு வருஷகாலம் நீங்களெல்லோரும் உபத்திரவம் செய்ததெல்லாம் பயனற்றது. இந்தக் காரியத்திற்கு மாத்திரம் தங்களுடைய தயவிருக்கவேண்டும். இந்தப் பட்டணத்திலுள்ள எல்லா ஸ்டேஷன்களிலும் அவளை நாம் தேடினோம்; அவள் எங்குமில்லை. அவளை யாரோ வேறு எந்த இடத்திலோ மோசக்கருத்தோடுதான் வைத்திருக்க வேண்டுமென்ற சந்தேகமே என்னுடைய மனசில்

தோன்றுகிறது. நாம் இதை இந்தமட்டும் விட்டுவிடக்கூடாது. அவளை நாம் எப்படியாவது கண்டுபிடித்தே தீரவேண்டும். இறந்துவிட்டவள் அமிர்தவல்லி; இவள் அமிர்தகலசமேதான், அதற்குச் சந்தேகமே இல்லை.'' என்று வெகு மரியாதையோடும், பயபக்தியோடும் கூறினர்.

அதைக்கேட்ட தாயார் இன்பமும் துன்பமும் அடைந்தவளாய் வெகு பிரீதியோடு, "என்னருமைத் தம்பி! உன்னிஷ்டத்திற்கு மாருகக்கூட நான் நடப்பேனு? எப்படியாவது நம்முடைய வம்சம் விருத்தியடைந்தால் போதும் என்பதொன்றையே நான் வேண்டுகிறேனப்பா. அதைப்பற்றி நீ சற்றும் கவலைப்பட வேண்டாம். இதனுல் நம்முடைய சொத்தெல்லாம் முழுகிவிட்டாலும் பாதகமில்லை. உன்மனம் குளிர்ந்தால் அது ஒன்றே எனக்குப் போதுமானது. உன் வாயிலிருந்தும் இவ்விதமான சொல் வரப்போகின்றதா என்று காத்துக்கொண்டிருந்த எனக்கு இப்போது கூறிய சபதத்தைக் கேட்கும்போது, என் தேகம் பரவசமாகின்றது. உன்னிஷ்டப்படியே செய்யப்பா தம்பி! நீ காலைமுதல் ஆகாரமே கொள்ளவில்லையே! நீ நேற்று அடிபட்டவனுயிற்றே! நீ பட்டினி கிடந்தால் உடம்பு கெட்டுப்போகுமப்பா! நாம் காலைமுதல் ஒரு ஸ்டேஷன் பாக்கியில்லாமல் சுற்றிவிட்டோம். எங்கும் அவளைக் காணவில்லை. என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. பொழுதும் அஸ்தமிக்கும் சமயமாய் விட்டது. ஆகையால் இனி நாம் எங்கே தேடுவது?.........ஒன்று செய்வோம். வீட்டுக்குப்போய், இந்தத் தட்டுகளை யெல்லாம் வைத்துவிட்டுக் கொஞ்சம் ஆகாரம் பார்த்துவிட்டு, நமது மோட்டார் வண்டியைப் போட்டுக்கொண்டு தேடினுல் அது இந்தப்பெட்டி வண்டியைவிட வேகமாய்ப் போகும். அவ்விதம் செய்வதே உசிதமென்று தோன்றுகின்றது. உன்னிஷ்டம் எப்படியப்பா?'' என்று தேனெழுக வெகு வாத்ஸல்யத்தோடு கேட்டாள்.

தாயாரை ஆதிமுதல் தெய்வமாக வணங்கி வந்தவனுன தனயன், அவள் சொன்னதைக் கேட்டு, "அம்மா எனக்கென்னவோ பசி என்பதே கொஞ்சம்கூட இல்லை. நாம் இப்படியே திரும்பினுலும் வீட்டில் நான் எதுவும் சாப்பிடமுடியா வகையிலிருக்கிறது என் வயிறு. ஆனுல், தாங்கள் சொன்னதுபோல மோட்டாரில் போவது உசித

மாகத் தோன்றுகின்றதாகையால் நாம் திரும்பலாம்.'' என்றார். தன் மகன் ஆகாரம் வேண்டாம் என்று சொன்னதைக் கேட்க அவரது தாயின் மனதில் கவலை யொருபுறம் பாதித்ததானாலும், எப்படியாவது அவனை வீட்டிற்கு அழைத்துக் கொண்டுபோய் விட்டால், பிறகு பலவந்தப்படுத்தியாவது சொற்ப ஆகாரமாகிலும் புசிக்கச்செய்யலாம் என்ற எண்ணமும் தோன்றியதாகையால், அந்த அம்மாள் தன் மகனை நோக்கி, "சரி, தம்பீ! வண்டியை வீட்டுக்குத் திருப்பச் சொல்'' என்றாள். உடனே ஜெமீந்தார் வண்டிக்காரனை அழைத்து வண்டியை வீட்டிற்குத் திருப்ப உத்தரவிட, வண்டியும் சிந்தாதிரிப் பேட்டையை நோக்கிச் செல்லத்தொடங்கி, சற்றுநேரத்தில் வீட்டை யடைந்தது.

சிந்தாதிரிப்பேட்டை பங்களாவை விட்டு அவர்கள் போகும் போது அந்த அம்மாளின் புதல்வி மாத்திரம் பங்களாவிலேயே இருந்தாள். அவள் அவர்கள் உத்தேசித்துப் போன காரியத்தை மாத்திரம் தெரிந்து கொண்டிருந்தாளேயன்றி பிறகு வெளியில் நடந்தவைகளை யறியாளாகையால், "இன்னும் இவர்கள் ஏன் வரவில்லை? நேரமாய் விட்டதே. இவ்வளவு நேரம் இவர்கள் என்ன செய்கிறார்கள்?'' என்று எண்ணி அவர்களின் வரவை எதிர்பார்த்துக்கொண்டே இருந்தாள். மணி ஏறஏற அவளுக்குக் கலவரமாகவே இருந்தது. மணி முறையே சென்றுகொண்டே இருக்கிறது. அவர்களோ வரவில்லை. அவள் மனதில் பற்பல எண்ணங்கள் தோன்றி வதைக்க வாரம்பித்தன. "நேற்று மோட்டாரினால் அடிபட்டு இரவெல்லாம் பிரக்ஞை யற்றுக் கிடந்த பையன் காலையில் தைரியமாய்ப் புறப்பட்டுப் போனானே! போகும்போது வழியில் ஏதாவது மறுபடியும் விபத்து நேர்ந்துவிட்டதோ! அல்லது, அவன் மூர்ச்சையாய் மயங்கி விழுந்து விட்டானோ! அப்படி இருந்தாலும், வண்டியோடு அம்மாள் அவனை அழைத்துக்கொண்டு வந்து விடுவாளே, அதையும் காணோமே, என்ன காரணத்தால் வரவில்லை யென்பது தெரியவில்லையே. போனவிடத்தில் அந்தப் பெண் இவர்களை யனுப்பாது வைத்துக்கொண்டாளோ, அப்படி யிருந்தாலும், மணி 6 அடிக்கப்போகின்றதே! இன்னுமா அவர்கள் அங்கிருப்பார்கள்? ஒரு தகவலும் தெரியவில்லையே.'' என்று அவள் உணவையும் மறந்து, கவலையே வடிவாய் உட்கார்ந்திருக்கும்

தருணம், பெட்டி வண்டி பங்களாவின் வாசலில்வந்து நின்றதைக் கண்டவுடன், அவளது மனம் பூரித்தது. அவள் வண்டிக்கருகில் போய், "ஏனம்மா! இவ்வளவு நேரம்? தம்பிக்கு உடம்பு ஒன்றுமில்லையே! காலைமுதல் இவ்வளவு நேரம் அந்தப் பெண்மணியின் வீட்டில் என்ன செய்தீர்கள்? சாப்பாட்டிற்குக்கூட வராமல் நின்று விட்டீர்களே." என்று பற்பல கேள்விகளை ஒரே காலத்தில் கேட்டாள். அப்போது வண்டியிலிருந்து கீழே இறங்கிய அவளன்னையின் முகம் களித்திருக்காமல் கவலை கொண்டிருந்ததையும், வண்டிக்குள் தட்டுகள் அப்படியே வைக்கப் பட்டிருந்ததையும், தம்பியும் துயரமாகவே உட்கார்ந்திருந்ததையும் கண்ட கமலம் திடுக்கிட்டு ஸ்தம்பித்து நின்று விட்டாள். தன்தாயும் தம்பியும் வந்ததனால் உண்டான சந்தோஷம் முழுதும் ஒரு நொடியில் பறந்துபோய் விட்டது. அவ்வளவு நேரம் கழித்து வந்தவர்கள் சந்தோஷமாய் வாராமல் விசனமாயும், வாடிய முகத்தோடும், தாங்கள் சுபமாய்க்கொண்டுபோனவைகளைத் திருப்பி எடுத்துக்கொண்டும் வரவேண்டிய காரணம் என்னவோ தெரியவில்லையே." என்று எண்ணியவளாய்த்தன் தாயின் முகத்தை நோக்கினாள்.

பார்வதியம்மாளும் வண்டியை விட்டுக் கீழே இறங்கி வேலைக்காரியை ஏவி பெண்டிவண்டிக் குள்ளிருந்ததையெல்லாம் எடுத்து வந்து உள்ளேவைக்கச் சொல்லிவிட்டு, வேலைக்காரர்களைக் கூப்பிட்டு பிள்ளையை முன்போலவே நாற்காலியின் உதவியால் கீழே இறங்கச் செய்தாள். இளைய ஜெமீந்தார் கீழே இறங்கியவுடன் அங்குத் தோட்டத்தில் போடப்பட்டிருந்த ஒரு சோபாவில் அவர் தம்மை உட்கார வைக்கச்சொல்ல அப்படியே அவர்கள் செய்தார்கள். உடனே பார்வதியம்மாள் காலையில் புறப்பட்டது முதல் நடந்த வர்த்தமானங்களைத் தன் புதல்வியிடம் கூறினாள். அதைக்கேட்ட கமலம் முற்றிலும் கலங்கிப்போய், "ஐயோ! நமக்கு இப்படியா ஒவ்வொன்றும் துன்பமாகவே முடியவேண்டும்! தம்பியின் கஷ்டமெல்லாம் நீங்கி விட்டது; இனி அவனால் நாமும் மன நிம்மதியாக விருக்கலாமென்று மனப்பால் குடித்ததெல்லாம் வீணாயிற்றே! ஐயோ காலை முதல் தண்ணீர் கூடக் குடிக்காமல் தம்பி பட்டினியாய்க் கிடக்கின்றானே அம்மா! தம்பிக்குக் கொஞ்சம் ஆகாரம் கொண்டு வரட்டுமா?" என்று வெகு

வாஞ்சையோடும் பரிதாபகரமான பார்வையோடும் கேட்டாள். அதைக்கேட்ட பார்வதியம்மாள், "கமலம்! நீ முன்னுல் சென்று நமது மோட்டாரைத் தயார் செய்யச் சொல்; வண்டியோட்டிக்கு ஆளனுப்பு. நேரமாய்விட்டது. தம்பியை நான் பார்த்துக்கொள்கிறேன்." என்று கூறி அவளை யனுப்பிவிட்டு, மகனிடம் சென்று "அப்பா! தம்பீ! நீ சுத்தப்பட்டினியாய்க் கிடந்தால் உனக்கு மயக்கம் வந்துவிடும். உன் உடம்பிலுள்ளரத்தம் பாதியும் போய்விட்டது. ஆகையால் நீ சிறிதளவு உனக்கு வேண்டிய வரையில் ஏதாவது ஆகாரம் பார்த்துக் கொள். உடனே நாம்புறப்பட்டுப்போகலாமப்பா. இங்கேயேநான்கொண்டுவரட்டுமா? தம்பீ! உனக்கு எதுவேண்டியது? சொல்லப்பா என் துரையே! உன் முகத்தைப்பார்த்தால் இப்போதே களைவந்து விடும் போல விருக்கிறது. ஆகையால் கொஞ்சம் ஏதாவது ஆகாரம் பார்த்துக் கொள்ளப்பா தம்பீ!" என்று வெகு வாஞ்சையோடும், உருகிய மனத்தோடும், கனிந்த பார்வையோடும் கூறினுள்.

விசனமே வடிவாய் உட்கார்ந்திருந்த ஜெமீந்தார் என்ன செய்வதென்பதையறியாது வைதேகியின் மீதே தம் நினைவைச் செலுத்தி அதே சிந்தனையிலிருந்தவராதலால் அவர் அவள் சொல்லிய வார்த்தைகளைச் சரியாகவே செவியில் வாங்கியவரல்லர்; இருந்தாலும் தமது தாயார் ஏதோ தம்மிடம் பேசுவதை மாத்திரம் உணர்ந்தார். ஆதலால் அவள் சொல்லியதை யறியாமல் தாம் என்ன மறுமொழி கூறுவது என்று யோசிக்குங்கால், மறுபடி தமது தாயார் முன் சொன்னதையே மறுபடியும் சொல்ல அதை உணர்ந்த பிறகு அவர் அந்த அம்மையின் வார்த்தையைத் தட்டவும் முடியவில்லை. தாம் ஆகாரம் செய்யவும் பிடிக்கவில்லை. என்ன செய்வார் பாவம்! ஆகாரம் சுத்தமாய் வேண்டாமென்றாலோ தம் தாய் வருந்துவாள். அதற்கும் தாம் இடம் தரலாகாது என்று யோசித்து மெல்லப் பேசத்தொடங்கி "அம்மா எனக்கென்னவோ பசியா, தாகமா ஒன்றுமே எடுக்கவில்லை. என் பொருட்டாகத் தாங்களும் ஆகாரம் செய்யாமல் இருந்து விடுவீர்களோ என்றும் நீங்கள் சொல்வதைத் தட்டலாகாதென்றும் நான் கொஞ்சம் ஆகாரம் எடுத்துக்கொள்ள எண்ணுகிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம். கொஞ்சம் ரசஞ் சாதம் ஒரு கிண்ணத்தில்

கரைத்துக்கொண்டு வாருங்கள். அதைப்பிடித்த வரையில் மெல்லச் செலுத்துகிறேன். பால் முதலிய ஆகாரங்களை நான் அந்தப் பெண் மாணைத்தேடி அவளுடைய இருப்பிடத்தை யறிந்தாலன்றி தொடவே மாட்டேன். ஆகையால் நேரமாகிறது. சீக்கிரம் வாருங்கள். அதோ மோட்டாரும் வந்து விட்டது'' என்றார்.

அதைக்கேட்ட பார்வதியம்மாள் சுத்தமாய்ப் பட்டினி கிடந்த மகன் கொஞ்சமாகிலும் ஆகாரம் பண்ணுவதாக ஒப்புக்கொண்டதற்குச் சற்று மகிழ்ந்தவளாய்ச் சரேலென்று உள்ளே சென்று 5 நிமிஷத்தில் திரும்பி கையில் ஒரு கூஜாவில் ஜலமும், மற்றொரு கையில் ஒரு வெள்ளிக்கிண்ணத்தில் ரசஞ் சாதமும் இன்னொரு தட்டில் வேறு சில பதார்த்தங்களையும் எடுத்து வந்து அவைகளை அங்குப் போடப்பட்டிருந்த பலகையின் மேல் வைத்து மகனுக்குக் கைசுத்தி செய்ய ஜலம் கொடுத்த பிறகு ஆகாரத்தைக் கிண்ணத்தோடு அவர்கையில் கொடுக்க, அதை வாங்கியபொழுதே அவருக்கு ஒருவிதக் குமட்டல் உண்டாயதே யன்றி அதைப் புசிக்கவேண்டும் என்கிற ஆவலான எண்ணமே உண்டாக வில்லையானாலும், தாயின் பலவந்தத்திற்காக அதைமெல்ல இரண்டுவாய் சாப்பிடும் முன்னமேயே வாந்தி வரும் சமயமாய் விட்டபடியால். "அம்மா உங்களுக்காக நான் இதைச் சாப்பிடுவதாக ஏற்றுக்கொண்டு பல்லைக்கடித்துக்கொண்டு சாப்பிட முயன்றாலும் அது என் தொண்டையில் செல்லவில்லை யம்மா. இதோடு என்னை விட்டுவிடுங்கள். எனக்கு வாந்திவருகின்றது. இனி ஒரு வாய் கூடச் சாப்பிடமாட்டேன். என்னால் முடியவில்லை. என்னை மன்னித்து விட்டுவிடுங்கள்'' என்று இறைஞ்சி, பரிதாபகரமாக அவளைப் பார்த்துக்கொண்டே கூறியதைக்கண்ட தாயார் அவர் கஷ்டப்பட்டுச் சாப்பிட்டுப் பார்த்தும் அது முடியாமலிருப்பதைத் தானே நேரில் கண்டபடியாலும், அவருடைய மனநிலைமையைத் தான் நன்றாக கவனித்தாளாதலாலும் அதற்கு மேலும் தான் பலவந்தப்படுத்தி வருத்துவது கூடாதென்று எண்ணியவளாய்க் கவலையோடு பேசாமல் கிண்ணியை வாங்கி தூரவைத்துவிட்டு, கைக்கு ஜலம் கொட்டிவிட்டு "அப்பா தம்பி! மோட்டார் தயாராகிவிட்டது. எழுந்திரப்பா இன்று நீ காலுக்கு மருந்து போட்டுக்கொள்ள வேண்டாமா? வா இப்படியே. நாம் நம்முடைய வைத்தியர் வீட்டிற்குப் போய் காலுக்கு

மருந்து போட்டுக்கொண்டு நேராக நீ பார்க்க வேண்டிய இடத்திற்குப் போகலாம்." என்று வாஞ்சையோடு கூறினாள்.

அதைக்கேட்ட மகன் வெகு வணக்கத்தோடு "அம்மா! தாங்கள் சென்று ஸ்நானம் முதலியவைகளை முடித்துப்போஜனம் செய்யப்போங்கள். நான் நீங்கள் சொல்லியது போலவே வைத்தியர் வீட்டுக்குப் போய் விட்டு ஒரு ரவுண்டு சுற்றிக்கொண்டு வருகிறேன். எனக்குத் துணைக்கும் சகாயத்திற்கும் நமது வேலைக்காரனையும் என் நண்பன் பரமசிவனையும் அழைத்துக்கொண்டு போகிறேன். அவனுக்குச் சொல்லியனுப்பியிருக்கிறேன். அதோ அவனும் வந்து விட்டான். நீங்கள் உங்கள் வேலையைக் கவனியுங்கள்." என்று சொல்லிக்கொண்டே இருக்கையில் 23 வயது மதிக்கத்தக்க ஒரு யுவகன் அதிக டாம்பீகமில்லாமல் நிதானமான உடையோடும், தலையில் தேங்காயளவு முடிந்துவிட்ட குடுமியோடும், பார்ப்பதற்கு வசீகரத்தன்மை வாய்ந்தவனுயும் அவ்விடம் தோன்றி "என்ன தம்பீ! எதற்காக என்னையழைத்தாய்?" என்றுன். உடனே ஜெமீந்தார் வேலைக்காரர்களால் முன்போலவே நாற்காலியின் உதவியால் வண்டியில் ஏற்றப்பட்டார். அவரது தாயர் தானில்லாமல் மகனை இத்தருணம் தனியாக அனுப்பக்கவலைப்பட்டாளானுலும் பரமசிவத்தினிடத்தில் அவர்களுக்குக்கிருந்த மதிப்பினுலும், நம்பிக்கையினுலும் அந்த அம்மாள் மறுமொழி கூறுமல் பரமசிவம் கூடவிருக்கும் போது யாதொரு பயமுமில்லை என்ற நம்பிக்கையைக்கொண்டு, பரமசிவத்தை நோக்கி "பரமசிவம்! தம்பியை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள். சேதியை எல்லாம் பிறகு தம்பியே கூறுவான். நேற்று நடந்த சேதி எல்லாம் உனக்குத் தெரியாதாகையால் நீ விழிக்கிருய். வண்டியிலேறு பிறகு சொல்லுவான். நேரமாய்விட்டது" என்றுள்.

அதைக் கேட்ட பரமசிவன் இளைய ஜெமீந்தாரை இருவர் தூக்கிச்சென்று வண்டியில் ஏற்றியதையும் கண்டு திடுக்கிட்டு என்ன விபரீதம் நடந்துவிட்டதோ என்று குழம்பிப்போய் "என்ன தம்பீ சேதி? ஒன்றும் தெரியவில்லையே!" என்று கேட்டான். அதற்கு இளையஜெமீந்தார் "சிவா, நீ முதலில் வண்டியில் ஏறு. பிறகு சொல்கிறேன்." என, உடனே பரமசிவனும் வண்டியிலேற, இரண்டுவேலைக்காரர்கள் முன்பக்கம் உட்கார வண்டியும் கிளம்பியது. நேராக

வண்டியைத் தமது வைத்தியர் வீட்டிற்கு ஓட்டும்படிக்குச் சொல்லிவிட்டு, முதல் நாள் இரவில் நடந்ததிலிருந்து, அப்போதைய வரையில் நடந்த சகலமான சேதியையும் தம் மித்திரனிடம் கூறினர் ஜெமீந்தார்.

அந்த வரலாறுகளைக் கேட்ட பரமசிவன் ஒருபுறம் துன்பமும், ஒருபுறம் இன்பமும் ததும்பப்பெற்றவனாய், கண்ணில் நீர் பெருக, "ஆகா தம்பீ! உன் வாயிலிருந்தும் இந்தச்சொல் வருமாவென்று ஏங்கிக்கிடந்த எங்களுக்கு இம்மாதிரி அமிர்த தாரை பொழிவது போன்ற ஆறுதலான சொல் வந்ததைக் கேட்டதனால், சந்தோஷமாயிற்று. உன் காலில் அடிபட்டதனால் கொஞ்சம் விசனமிருந்தாலும் அந்த அடி நன்மையை விளைவித்திருப்பதால் அந்த விசனமும் சந்தோஷத்தையே உண்டாக்குகிறது. ஆனாலும் அதற்கெல்லாம் மேலானதாய்க் கடைசிச்சேதிதான் மனத்தை மிகவும் வருத்துகின்றது. ஆயினும் பாதகமில்லை. தம்பீ! என் மனத்தில் தைரியமே உண்டாகின்றது. நீ காலை முதல் தேடிப்போலீஸ் ஸ்டேஷன்களுக்கெல்லாம் அலைந்தது போதும். இனியுமலையவேண்டாம். நான் சொல்வதைக் கேள். இப்பொழுது நேராக வைத்தியர் வீட்டிற்குப் போய்க் காலுக்கு மருந்துபோட்டுக் கொண்டு நேரே திருவொற்றியூருக்குத்தான் நாம் போகவேண்டும். அங்கே துப்பறியும் நிபுணரான ராஜாராம் நாயுடுகாரு இருக்கிறார். அவரிடம் சேதியை நடந்தது நடந்தவாறு உரைத்தால் அவர் எப்படியாவது உன் மனத்தைக்கொள்ளை கொண்ட கோகிலத்தைக் கண்டுபிடித்து உன்னிடம் சேர்த்துவிடுவார். அதில் கொஞ்சங்கூடச் சந்தேகமே இல்லை. நீ நன்றாய் உறுதியாய் நம்பலாம். என்ன யோசிக்கின்றாய்? அவர் அங்கு இருப்பது உனக்கும் தெரியுமே. நீ காலையிலேயே அங்கேபோய்த் தகவலைச் சொல்லிவிடுகிறதுதானே." என்றான்.

ஜெமீந்தார்:—பரமசிவம்! அவர் பெயரை மாத்திரம் அடிக்கடி பேபர் மூலமாய்ப் பார்த்திருக்கிறேனே யன்றி, அவரை நேரில் கண்டதில்லை. அவர் ஜாகையின் இருப்பிடம் எனக்குத் தெரியாது. காலையிலேயே அங்குப்போக வேண்டுமென்று நான் நினைப்பதற்கு இடமே இல்லை. திருவல்லிக்கேணியில் அவளை முதலில் வீட்டில்போய்ப் பார்த்

தோம். அங்கு இவ்விதமான சேதி கிடைத்தவுடன், போலீஸ் ஸ்டேஷனுக்குப்போய் எப்படியாவது அவளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு ஒவ்வொரு ஸ்டேஷனிலும் போய் விசாரித்ததில் இடி இடித்த சேதி கிடைத்ததேயன்றி நற்சேதி கிடைக்கவில்லை. அதனால் என் மூளையே கலங்கிவிட்டமாதிரியாய்விட்டது. பிறகு என்ன செய்வதென்றும் எப்பொழுது மறுபடியும் அந்த மடமயிலைக் காணலாம் என்றும் உண்டான ஏக்கத்தால் எனக்கு அந்த நினைவே மறந்துபோய் விட்டது. நீ நல்ல தருணத்தில் அதை நினைவூட்டினாய். நீ சொல்லியதே நல்ல யோசனை. அப்படியே செய்வோம். இதற்குத்தானப்பா, சரியான தோழன் ஒருவன் வேண்டும் என்பது. சரியான நண்பன் நீதான்'' என்று கூறினார். அதற்குள் வண்டி வைத்தியர் வீட்டு வாசலில் வந்து நின்றது.

அதற்குள் நாம் அந்த வைத்தியர் வீட்டில் நுழைந்து அங்கு வந்திருந்த வியாதியஸ்தர்களையும் வைத்தியரையும் கவனிப்பது அவசியமாகையினால் அங்குப் புகுவோம்.

எழும்பூரில் ஒரு பெரிய பங்களாவின் முன் பக்கத்து ஹாலில் அநேக பெஞ்சிகளும், நாற்காலிகளும் நிறைந்திருந்தன. மற்றொரு பக்கத்து ஹால் நிறைய பீரோக்களும், அவை நிறைய பற்பல தினுசு மருந்துகளும், அங்குப்பல மேஜைகளும், இன்னும் அநேக ஆயுதங்களும் சாமான்களும் நிறைந்திருந்தன. முன் பக்கத்தில் வைத்தியர் ஒரு நாற்காலியின் மேல் உட்கார்ந்திருந்தார். அவர் சுமார் 50 வயது மதிக்கக் கூடிய கட்டுமஸ்தான தேகத்தை யுடையவராயும், சுறுசுறுப்பான முகத்தோற்றமுடையவராயும் விளங்கினார். அங்கு இன்னுமுள்ள பெஞ்சி நாற்காலிகளில் உட்கார்ந்திருந்த மனிதர்களெல்லாம் தம் தம் வியாதியைக் கூறி மருந்துச் சீட்டுக்கள் வாங்கிக்கொண்டு சென்று கொண்டே இருந்தார்கள். அந்தச் சமயம் ஒரு மனிதர் உள்ளே வந்து வைத்தியரிருந்த இடத்திற்கு நேரே போய்த் திணறத் திணற. "ஐயா வைத்தியகாரைய்யா ஊ ஊ ஊ, ஏக் ஏக் ஏக்.'' என்று பலமாகக் கூச்சலிட்டுக் கத்தவாரம்பித்துவிட்டான். அதைக் கண்ட எல்லோரும் "இதென்ன விபரீதம். இவனுக்கு எவ்வித பாதையான நோயோ தெரியவில்லையே. இவன் தன்னையுமீறி இப்படி அழுகிறான் பாவம். முன்னால் இவனைப் பார்த்து அனுப்புங்கள். பிறகு பாக்கி

இருப்போரை கவனிக்கலாம்'' என்று அந்த மனிதனுக்குப் பரிந்து பேசினார்கள்.

உடனே வைத்தியர் அந்த மனிதனை நோக்கி நிதானமாகப் பேசத் தொடங்கி ''என்ன ஐயா சமாச்சாரம்? உமக்கென்ன உடம்பு? எல்லாவற்றையும் சொல்லும். மருந்து தருகிறேன்'' என்றார். அதைக் கேட்ட அந்த மனிதன் முன்னிலும் அதிகமாகத் திக்கித்திக்கி யழுதுகொண்டே ''ஐயா!...வைத்தியக்கார ஐயா!...என் ஒடம்பு ஒண்ணு ரெண்டாய்யா? நேத்து ராத்ரி புடிச்சி என்னை சனியன் புடிச்சிதுய்யா. நேத்து ராத்ரி நான் வூட்லெ என்படுக்கெ மேலே படுத்திக்கிணு; மாயா விநோதப்பரதேசி இங்கற கதைப்பொஸ்தவம் படிச்சிக்கிணே இருந்தேய்யா. அதுலே கோபாலசாமியேக் குழிலே தள்ளி மண்ணெப் போட்ற சமயத்திலே எங்கவூட்டுப் பொம்பளெ, தேளு தேளு வளக்குக் கொண்டான்னு. எம்மவன் வந்து நான் வச்சிருந்த வளக்கெ எடுத்துக்கினுப் போனும்.ஒடனே எனக்குக் கண்ணு குருடாயிட்டுதுங்க. ஐயோ! என்ன செய்வேன்? எயுத்தேதெரியலீங்க. கண்ணெக் கசக்கிக்கசக்கிப்பாத்தேன். தெரியலே. அப்பாலே கோபாலசாமியே குழியிலே தள்ளி என்ன பண்ணுங்கன்னு தெரியாமெ கண்ணு அவிஞ்சு பூட்டுதேண்ணு அழுகே அழுகேயா வந்திடுச்சி. பொஸ்தகத்தை எல்லாம் தடவிப்பாத்தேன். எயுத்தே கைக்குத் தெரியலே. கோபாலஸாமியும் என்கைக்கு ஆப்படலே. குழியும் பள்ளமா கைக்கித் தெரியிலே. என்ன சேவேன்? கண்ணு பூட்டுதே இண்ணுகத்தினே. அங்கே கோபாலஸாமிக்கு வைத்யம் பண்ணவந்த மிஸ்டர் வெல்டன் தொரெ வந்தாரு. அவரையே என் கண்ணுக்கு மருந்து போடக் கூப்பிட்டேன்; தடவிப்பாத்தேன்; எங்கும் காணலே. அப்பாலே நான் கூச்சலிட்டுக் கவுந்தாப்பலே படுத்திக்கிணே கண்ணு பூட்டுதே இண்ணு போட்ட கூஷலெக்கேட்டு எம்பொண்டாட்டி புள்ளே எல்லாரும் ஓடியாந்தாங்களாம். நான் படுத்து அயுததெப்பாத்து எம்மவன் நாயினு நாயினு இண்ணுன். நானு கண்ணு போயிடுச்சே போயிடுச்சேஇண்ணேன்.ஒடனே எம்மவன்என்னைமல்லாக்கத் தள்ளிதண்ணிகிண்ணி யெல்லாத்தியும் எம் மூஞ்சிலே ஊத்தி எங்கண்ணெத் தொறக்கப்பண்ணுய்யா. அப்பாலே பளிச்சுனு தெரிஞ்சுது கண்ணு. இனிமேலே அப்படி ராவுலே கண்ணு தெரியாமெபோகாமே இருக்க

மருந்து கொடுங் கோய்யா" என்றான். அவன் சொல்லியதைக் கேட்ட எல்லோரும் கல்லென்று நகைத்து விட்டார்கள். அவன் இதையெல்லாம் சட்டை செய்யாமல் மேலும்பேசிக்கொண்டே போனதை வைத்தியர் தடுக்க முயன்றதைப் பார்த்த பக்கத்திலிருந்த ஒரு பெரிய மனிதர், "இருங்கள். இவன் மூளை இன்னும் எப்படித்தான் வேலை செய்திருக்கிற தென்பதைப் பார்ப்போம். சற்று இருங்கள்" என்று கூற, பெரியவர் வார்த்தைக்கிணங்க வைத்தியர் பேசாமல் கேட்கலானார்.

வந்த மனிதன்:—அப்ராங்க,கோபாலசாமி குழியிலேந்து பொயச் சுப்பூட்டான். நானும் தூங்கிப்பூட்டேன். காத்தாலே கண்ணை முளிச்சிக்கிணேன். நண்ணாத் தெரிஞ்சுது. எங்க வூட்லெ காப்பி குடிக்கிற வயக்கமுண்டுங்க. அப்பிடியே நானு காப்பி குடிக்க உள்ளற போனேன். அங்கே எம்பொஞ்சாதி ஏதோ வேலையாப் பெயக் கடைலெ போயிருந்தா. நானு அவசரமா வெளியே போவணும்னு காப்பியெ நானே எடுத்துக் குடிக்கலா முண்ணுட்டுப்போயி எடுத்தேன். நானு தினம் ஒரு லோட்டா காபிதான் குடிப்பேன். அந்த லோட்டாவெ அங்கே காணுங்க. அதனாலே அந்த அளவு காப்பியெ அப்பிடியே குடிச்சிப் புட்லாமுண்ணு தவலையோடே எடுத்து வாயிலே உட்டுட்டுத் தவலையேப் பார்த்தாக்கா, அதிலே ரவெயுண்டு காபி கூட இல்லீங்க. ஓடனே எனக்கு பயமாப்பூட்துங்க. ஏண்ணா, நான் ஒரு லோட்டா காபிதான் குடிக்கர வயக்கம். என் வவுறு அதான் புடிக்கும்ணு எம்பொஞ்சாதி சொல்லுவா. இண்ணிக்கி மாத்தரம் எம் வவுறு ஒரு தவலை நெறய எனக்கு எம்பொஞ்சாதிக்கி, எம்மவனுக்கு, சின்ன மவனுக்கு, பொண்ணுக்கு அல்லாருக்கும் போட்டு வச்சிருந்த காப்பி எப்பிடி புடிச்சிதய்யா. திடீனு என் வவுறு எப்பிடி அந்தே பெருசாச்சுதுங்க. என் வவுறு பெரிசாப் போச்சா? வாயி பெரிசா பூட்டுதா? எது பெரிசாப் பூட்டுதோ அத்தெப் பாத்து மருந்து கொடுங்கய்யா. ஐயோ வவுறு பெருசா பூட்டுதானா, செத்து பூடுவேனே. வாயி பெருசாப் பூட்டுதுண்ணா வவுத்துலெ இக்கறதெல்லாம் வாயாலெ வந்துடுமே, என்ன செவேண்ணு அயிதுகினே வெளிலே கூடப் போவாமே அப்டியே போயிப் படுத்துகினே. அவ்வளவுதானுங்க. கண்ணை இசுத்து துங்க. தூக்கம் வராமலே

இருக்கச்சே திடீண்ணு இப்பிடித் தள்ளிப்புட்டுதுங்க. அப்பிடியே வியுந்துட்டேனுங்க." என்று அபிநயம் காட்டிக்கொண்டே இப்படித் தான் தள்ளிவிட்டதென்று காட்டிய தருணம் நாற்காலியில் உட்கார்ந் திருந்த வைத்தியரை அப்படியே சடக்கென்று தள்ளிவிட்டான். அவன் மூடத்தனத்தை எல்லோரும் வேடிக்கையாகக் கவனித்துக் கொண்டு அவன் வாயையும் அபிநயத்தையும் பார்த்த வண்ணமாகவே இருக்கும் தருணத்தில், அந்த முட்டாள் எதிர்பாராவிதத்தில் வைத் தியரைத் தள்ளிவிட்டது தான் தாமதம்; அவர் நாற்காலியோடு எல் டிக்குப் படிக்காமலேயே பல்டியடித்து விழுந்துவிட்டார். உடனே எல் லோருக்கும் ஆத்திரம் பொங்கி எழுந்தது. ஒரே காலத்தில் அத் தனை பெயர்களும் அந்த மூட மனிதன் மீது பாய்ந்து, அவனை நைய் யப்புடைத்து, குந்தக்குந்தத் தள்ளிக்கொண்டுபோய் வீதியில் தள்ளி விட்டு வந்தார்கள். பிறகு அவனுடைய மூட மதியையும் பைத் தியக்கார வார்த்தைகளையும் கண்டு சிரிப்பும், வைத்தியரைத் தள்ளிய தற்காகக் கோபமும் கொண்டு பலமாதிரியாய்ப் பேசத் தலைப்பட்டு "என்ன சார்! எங்காவது அடிபட்டதோ?" என்று வைத்தியரை வினவ, வைத்தியர் "அப்படி நான் அஜாக்ரதையாய்க் கீழே விழவில்லையே; தப்பித்துக் கொண்டேனே" என்றார். பிறகு குழப்பம் சற்றுக் குறைந்தது. அந்த சமயம் ஒரு வேலைக்காரன் வைத்தியரிடம் வந்து வணங்கி "ஐயா! செஞ்சிக்கோட்டை ஜெமீந்தார் வந்திருக்கிறார். உள்ளே வரலாமாவென்றும் தங்கள் சமயம் எப்படி இருக்கிறதென்றும் கேட்கிறார்" என்றான். உடனே வைத்தியர் "ஆ! நம்முடைய ஜெமீந் தாரா" என்று கூறிக்கொண்டே தாமே எழுந்து வீதிக்கு வந்து, நமது ஜெமீந்தாரிடம் நெருங்கிப் பணிவாய் விசாரித்தார். உடனே மோட்டார் விபத்தை மாத்திரம் அவர் கூறி தமது காலுக்குக் கட்டுக்கட்ட வேண்டுமென்று தெரிவிக்க, மருத்துவர் "ஐயோ! தங்களுக்கா இவ்வித ஆபத்து நேர்ந்தது. நேற்றே எனக்குச் சொல்லியனுப்பலாகாதா. இன்றும் சொல்லியனுப்பாமல் தாங் களேயா வரவேண்டும்" என்று வெகு மரியாதையோடு கூற, அவரை வேலையாட்கள் முன்போலவே இறக்கித் தனியான ஒருவிடுதிக்குக் கொண்டுபோய் உட்கார வைத்தார்கள். பிறகு 10 நிமிஷத்திற்கெல் லாம் வைத்தியர் காலுக்கு மருந்துகள் வைத்துக் கட்டிவிட்டு "பய

யில்லை. காயம் அதிகமில்லை. காலுக்கு அபாயம் நேரிடாது. எலும்புகளில் அடிபடவில்லை; சதையில் தான் கொஞ்சம் போய்விட்டது. அது மருந்தாலேயே ஆறிவிடும். கவலைவேண்டாம்'' என்று கூறினர். உடனே ஜெமீந்தாரும் ஆள்களின் மூலமாய் வண்டியை யடைந்து உட்கார்ந்தார். "அவசர ஜோலியாய்ப் போகிறேன். சாவகாசமாகப் பேசுவதற்கு இப்போது நேரமில்லை. மன்னிக்கவும்" என்று சொல்லிக்கொண்டே வண்டியைவிடச்சொல்ல, வண்டியும் நேராகத் திருவொற்றியூரை நோக்கி அதிவேகமாய் ஓடத் தலைப்பட்டது. வண்டிக்குள்ளிருந்த இருவரும் விசேஷ சம்பாஷணை எதுவும் புரியவில்லையானாலும், வைதேகியின் அழகையும், அவள் ஜீவகாருண்யத் தனத்தையும், அவளது மிருதுத் தன்மையையும் ஜெமீந்தார் தமது நண்பனேடு கூறிக்கொண்டே சென்ருர். பரமசிவனும் அதை எல்லாம் வெகு சந்தோஷத்தோடு கேட்டுக்கொண்டே அதற்குத் தகுந்தவாறு அவருக்குத் தேறுதலான மொழிகளைக் கூறி "பயப்படவேண்டாம். ராஜாராம் நாயுடு எப்படியும் இந்த மோசடியைக் கண்டு பிடித்துவிடுவார்'' என்று தைரியம் சொல்லிக்கொண்டே இருக்க, வண்டி திருவொற்றியூரை யடைந்து, பரமசிவன் தெரிவித்த விலாசமுள்ள பங்களாவின் வாசலில் போய் நின்றது.

உடனே பரமசிவம் இறங்கி உள்ளே சென்று "துப்பறியும் ராஜாராம் நாயுடுகாரு இருக்கிருரா?'' என்று விசாரித்தான். அங்கு இருந்த வேலைக்காரன் "அவர் ஒரு முக்கிய ஜோலியாய் மூன்று நாளாய் வெளியூருக்குப் போயிருக்கிருர்; எப்போது வருவாரோ தெரியாது'' என்ருன். அதைக் கேட்டதும் அவன் பாடு இடி விழுந்தது போலாய்விட்டது. தான் என்ன செய்வதென்பதை யறியாதபடி அவனுக்குக் கலக்கமுண்டாகிவிட்டது. "இவ்வளவு நேரம் இவருக்குச் சொல்லிவந்த தைரியமொழிகளெல்லாம் உடனே பலிக்காமல் வீணய்விட்டதே, அவர் எப்பொழுது வருவார் என்பது தெரியவில்லையே'' என்று கலங்கிக்கொண்டே வண்டியருகில் வந்து வேலைக்காரன் தெரிவித்ததை ஜெமீந்தாரிடம் கூறினன். அதைக் கேட்ட ஜெமீந்தார் அப்படியே அசைவற்றுக் கல்லாய் இருந்திவிட்டார். "ஐயோ! எல்லா அதிர்ஷ்டத்திற்கும் தகுந்தாற்போல இவரும் சமயத்தில் அகப்படவில்லையே. ஐயோ! நேற்று நமக்கு உபகாரம் செய்ய

வெண்ணி பல இடுக்கண்களையும் அனுபவித்து, பிறகு வஞ்சகத் தனமாய் எந்த இடத்தில் என்ன உபத்திரவம் அனுபவிக்கின்றாளோ அந்த உத்தமி? ஐயோ! எனக்காக அவள் பட்ட கஷ்டத்திற்காக வாவது நான் அவளுடைய துன்பத்தை விலக்க வேண்டுமென்று எவ்வளவோ பாடுபட்டும் அவைகள் எல்லாம் இப்படியா கெடுதல் சேதியாகவே முடியவேண்டும். ஆ! அந்தத் துப்பறிபவர் எப்பொழுது வந்து, என் மனோரஞ்சிதத்தைக் கண்டு பிடிப்பாரோ? அது வரையில் அவள் என்ன துன்பமனுபவிக்க வேண்டுமோ தெரிய வில்லையே! என்ன செய்வேன்! ஆ பெண்மணி! என் மனத்தைக் கவர்ந்த மரகதமணியே! ஐயோ! மறுமுறை உன் அழகிய மதி முகத்தை நான் காண்பேனே? எனக்கு அந்தத் தருசனமும் கிடைக் குமா? ஆ! நீ கண்ணீர் பெருக்கியவண்ணம் குரல் நடுங்கக்கூறிய வார்த்தைகள் இப்போதும் என் செவியில் கணீர் கணீர் என்று ஒலிக் கின்றனவே! ஏ மாதர்க்கரசியே! அருங்குண பூஷணமே! தெவிட் டாத தெள்ளமிழ்தே! உன்னை மறுமுறை இன்றே காணலாம் என்ற ஆவலெல்லாம் வீணாய்விட்டதே. இந்தத் துப்பறிபவர் உறுதி மொழி களைக் கேட்ட பிறகாகிலும் என் மனது அமைதியடையும் என்று எண்ணி வந்தேனே. அவர் முதலே அகப்படவில்லையே! என்ன செய்வேன்! ஏ கோமளாங்கி! நீ இந்நேரம் யாரிடம் என்ன இம்சைப் படுகின்றாயோ! ஐயோ! பாவி அறிய வகையின்றி அலைகின்றேனே. என் கண்மணி! நீ "ஐயா, ஐயா"! என்று அன்பாய் என்னை அழைத்து என் பொருட்டு நீ பட்ட கஷ்டங்களையெல்லாம் உரைத்தது பசுமரத் தாணிபோல என் மனதில் பதிந்துவிட்டதே. ஆ! அதை நினைத்தால் என் மனம் பாகாய் உருகியோடுகின்றதே. நீ மார்வாடியால் அடைந்த துன்பமும், கைவளையலைத் தோற்றதும், பிறகு போலீஸ் துஷ்டர் களால் சாராயக்கடைக்குச் சென்று காதுக்கம்மலைத் தோற்றுக் கஷ் டப்பட்டதும், வைத்தியர் வராமல் பிடிவாதம் செய்ததும், நீ கண் ணீரைக் காணுறுய்ப் பெருகவிட்ட வண்ணம் உன் கையைப் பிசைந் துக்கொண்டு, துடிதுடித்து, வாடிவருந்திய முகத்தோடு துவண்டு துவண்டு, ஆடி ஆடி, நெளிந்து, வளைந்து, தத்தளித்து, அகமுருகித் தவித்து நின்று உரைத்த காட்சி என் அகக்கண்ணில் அப்படியே இப்போதும் எதிரில் நாடக மாடுவதுபோல விருக்கிறதே. அதைக்

காணக் காண, என் மனம் முற்றும் உன் வடிவத்தின் மேலேயே சென்று லயித்து என்னை நிலையற்ற பித்தன்போல வாக்கிவிட்டதே. ஏ மாணிக்கமே! மதிப்பில்லா மரகதமே! உன் வடிவத்தைக் காணும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமோ" என்று பலவாறுய்த் தமக்குள் வாய் திறக்காமல் எண்ணமிட்டவண்ணம் உட்கார்ந்திருந்த தருணம், மறுபடி பரமசிவன் "என்ன தம்பீ! நீ தைரியமாகவிரு என்று நான் இந்நேரம் கூறியதையெல்லாம் மறந்துவிட்டாயே. ஏன் கவலைப்படு கிருய்? இன்றில்லாவிட்டால் நாளையாகிலும் கட்டாயம் அவர் வந்து விடுவார். எப்படியும் இந்தத் துப்பை அவர் துலக்கிவிடுவார். பயப் படாதே. நீ வேணுமானுல் மோட்டாரோடு வீட்டிற்குப் போய்விடு. நான் இங்கேயே இருந்து இந்த ஊர் சோற்றுக்கடையில் தின்று விட்டு, அவர் வருமளவும் அவர் வீட்டு வாசலிலேயே காத்திருந்து பிறகு அவர் வந்ததும் உடனே நான் பங்களாவிற்கே அழைத்துக் கொண்டு வருகிறேன். பயப்படாமல் பதில் சொல்" என்று வெகு வாஞ்சையோடு கேட்டான். அதற்கு ஜெமீந்தார் பதில் சொல்வ தற்குள் அந்த இடத்திற்கு மற்றொரு மோட்டார்கார் வந்து நின் றது. உடனே அதிலிருந்து ஒரு பெரிய மனிதர் வெகு காம்பீர மாயும், மரியாதையாயும், சாந்தமான பார்வையோடும், வசீகரத் தன்மை நிறைப்பெற்றவராயும், கையில் கருத்த பிரம்பொன்றை பிடித்துக்கொண்டும், தகத்தகாயமாய்ப் பிரகாசிக்கும் சீமைக்கமலக் கடுக்கனும் மோதிரமும் ஜ்வலிக்க, மூக்குக்கண்ணுடி பளபளப்பாய் மின்ன, நெற்றியில் திருமண் பளிச்சென்று ப்ரகாசிக்க,வண்டியைவிட் டுக் கீழே இறங்கினுர். அவருக்குப் பின்னுல், வேறெரு மனிதர் ஒரு பெட்டி, படுக்கை, ஒரு மூட்டை ஆகிய சாமான்களை எடுத்து வேலையாளிடம் கொடுத்துவிட்டு அவரும் இறங்கினுர். உடனே வீதி யில் முன்பு உட்கார்ந்திருந்த வேலைக்காரன் ஓடிவந்து அவர்களை வணங்கி, "எஜமானே! கும்பிட்றேன். அதோ அந்த வண்டியில் ரெண்டுபேர் வந்திருக்கிறுங்க. அவுங்க அரைமணியாய் இங்கேயே இருக்கிறுங்க. உங்களைத் தேடிக்கொண்டுதான் வந்திருக்கிறுங்க. ப்ரபுவே" என்று கைகட்டி வாய் புதைத்துக்கொண்டே வெகு மரி யாதையாயும் பயபக்தியோடும் கூறினுன்.

அங்கு வண்டியில் வந்தவரே, நமது துப்பறியும் ராஜாராம் என்று நமது வாசகர்களுக்குக் கூறுமலேயே விளங்கியிருக்கும். அவர் வண்டியில் வந்து இறங்கியதைப் பார்த்துக் கொண்டிருந்த பரமசிவன் கட்டுக்கடங்கா மனமகிழ்ச்சியடைந்து, "தம்பீ! அதோ ராஜாராம் நாயுடு வந்துவிட்டார். பயப்படாதே. உனக்கு அதிர்ஷ்டம்தான். அவர் எதிர் பாராவிதமாய் திடீரென்று வந்தது. இரு, நான் நேரில் போய் சேதியைச் சொல்லி யழைத்து வருகிறேன். அவர் ஏதாவது கொஞ்சம், ஆகாரமோ தாகசாந்தியோ செய்துகொண்டு வரட்டும். நான் போகிறேன்; பயப்படாதே" என்று, அடக்கமுடியாத சந்தோஷத்தோடு கூறிக்கொண்டே வண்டியைவிட்டு இறங்கி, துப்பறிபவர் எதிரில்போய் நின்ற தருணத்திற்குமுன்பே வேலைக்காரன் சொல்லி வாய்மூட, பரமசிவம் அவரை நமஸ்கரித்து, "தங்களுடைய பேட்டிக்காக செஞ்சிக்கோட்டை ஜமீந்தார் வந்திருக்கிறுர். தாங்கள் ஊர்ப் பிரயாணம்செய்த சிரமத்தால் அலுத்து இப்போதுதான் வருகிறீர்கள். நீங்கள் இல்லாவிட்டால், இந்த உலகமே கண் மூடிவிடுமென்று நான் திட்டமாய்க் கூறுவேன். தாங்கள் முன்னல் உள்ளேசென்று ஆகாரம் பார்த்துவிட்டு வாருங்கள். நாங்கள் முக்கியமான ஒருவேலையாக வந்திருக்கிறோம்; தாங்கள்தான் கடவுள்போல அதைச்செய்து எங்களை உயிர்ப்பிக்க வேண்டும்." என்று இன்னது பேசுவதென்பதை அப்போதிருந்த மனநிலைமையில் அறியாமல் ஏதோ தனக்குத் தோன்றியதை எல்லாம் சொல்லி வாய்மூடுமுன், ராஜாராம் பரமசிவத்தை நோக்கிப் புன்னகை தவழ்ந்த வதனத்தோடு "ஐயா! எனக்கு சிரமம் என்பதே கிடையாது. எனக்கு இதுவே கிரமமாய் விட்டது. ஆகையால் அதைப்பற்றி உபசார வார்த்தையே தேவையில்லை. நான் இப்போது டிபன் சாப்பிட்டுவிட்டு, வண்ணுரப் பேட்டையிலிருந்துதான் வருகிறேன். ஆகையால் எனக்குப் பசிகிடையாது. உள்ளே வாருங்கள். அவரையும் கூப்பிடுங்கள். உள்ளே போகலாம்" என்று வெகு அன்பாகக் கூறியதைக்கேட்ட பரமசிவன் "ஐயா அவருக்குக் கால் நடக்க முடியவில்லை. அவர் இருவருடைய சகாயத்தைக் கொண்டுதான் உள்ளே வரவேண்டும். தயவுசெய்து தாங்கள் அப்படி வண்டியிலேயே வந்துவிட்டால், வண்டி போகும்போதே சமாசாரத்தை நாங்கள் சொல்லிவிடுகிறோம். அது உங்களுக்குச் சம்மதமில்லாவிட்டால், அவரை மெல்ல இறக்கிக் கொண்டு வருகிறேன்" என்றுன்.

182825

அதைக் கேட்ட ராஜாராம் மிகவும் பதைபதைத்தவராய் "அவருக்குக் காலில் என்ன?" என்று கேட்டார்.

பரம:—ஐயா! அவருடைய கால் நேற்று மோட்டாரினுல் அடிபட்டு விட்டது. அதிலிருந்துதான் இப்பொழுது தங்களுக்குக் கொண்டு வந்திருச்கும் சேதியும் விளைந்தது." என்றுன். உடனே ராஜாராம், "ஓஹோ அப்படியா? ஆனுல் அவரைக் கஷ்டப்படுத்த வேண்டாம். இதோ நானே வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே உள்ளே சென்று, தமது சாமான்களை சரியாக வைத்தார்களா வென்பதைப் பார்த்துவிட்டு, கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட்டு, நேராக வந்து மோட்டாரில் ஏறினர். அவரைக் கண்டவுடன் ஜெமீந்தார் மட்டற்ற மகிழ்ச்சி யடைந்து, "வாருங்கள் வாருங்கள். எங்களால் உங்களுக்கு அதிக சிரமம் ஏற்படுவதைப்பற்றி வருந்துகிறோம். இப்போதுதான் நீங்கள் எங்கேயோ போய் அலைந்துவிட்டு வருகிறீர்கள். சற்று சிரமபரிகாரம் செய்துகொள்ளக்கூட அவகாசமில்லாமல் நாங்கள் உபத்திரவிக்க வந்துவிட்டோம். மன்னிக்க வேண்டுகிறோம்," என்று வெகு வணக்கத்தோடும், அன்பு ததும்பிய பயபக்தியோடும் கூறினர்.

அதைக்கேட்ட ராஜாராம் "அதெல்லாம் ஒன்றுமில்லை. எனக்கு இவைகளிலெல்லாம் கஷ்டமே கிடையாது. வெகு இஷ்டம் தான். அதற்காகத் தாங்கள் வருந்த வேண்டாம்" என்று சொல்லிக் கொண்டே வண்டிக்காரனிடம் கடற்கரையோரமாக வண்டியை விடும்படி சொல்ல, அந்தப்படியே வண்டியும் கடற்கரையோரமாக அதிகவேகமில்லாமல் நிதானமாய்ச் சென்றுகொண்டே இருந்தது. ஜெமீந்தார் முதல் நாள் மோட்டாரினுல் தமக்கு நேர்ந்த விபத்திலிருந்து அன்று அவரைக் கண்டது வரையில் ஒன்றுவிடாமல் சவிஸ்தாரமாகக் கூறி முடித்தார். அதைக்கேட்ட துப்பறிபவர் "நீங்கள் எல்லா ஸ்டேஷன்களிலும் விசாரித்தாய்விட்டதல்லவா. இனி அந்தக்குறையும் நீங்கிவிட்டது." என்று நகைத்துக் கொண்டே கூறினர்.

ஜெமீந்:— ஆசை, அக்ஞானம் இரண்டும் தூண்டியதால் எல்லா இடங்களிலும் விசாரித்தாய்விட்டது. இனி நீங்கள் தான் கதி. இதை

எப்படியாவது நீங்கள் தான் கண்டுபிடிக்க வேண்டும்—என்று இறைஞ்சிக் கூறினர்.

ராஜாராம்:—ஐயா ! நானென்ன கடவுளா ? நிச்சயமாய்ச்சொல்லி விடுவதற்கு முடியுமா ? ஏதோ இதைக்கேட்கும் போதே என் மனதில் காரியம் ஜெயித்துவிடும் என்று தோன்றுகிறது. என்னுலான வரையில் பிரயாசைப்பட்டு எனக்குத் தெரிந்த வரையில் பார்க்கிறேன். மேலே ஒருவன் பொதுவில் நிற்கவில்லையா? அவனருள் பூராவாக இருந்தால் ஒரு குறைவுமில்லை. என்னுல் என்ன இருக்கிறது ? அவன் அருள் நிரம்பியிருந்தால் ராஜாராம் கெட்டிக்காரன் தான். அவனருள் பூஜ்யமாயிருந்தால் அதே ராஜாராம் முட்டாள் தான். இதெல்லாம் நம்மாலாவதொன்றுமில்லை பாருங்கள். என்னவோ ஈசன் காட்டுகிற வழியில் இறங்கி வேலை செய்கிறேன். அவன் விட்ட வழியாகிறது. சரி எல்லாச் சேதியையுமறிந்து கொண்டேன். இப்போது நாம் ரோகத் திருவல்லிக்கேணியில் அந்தப் பெண் வீட்டுக்குப்போவோம். பிறகு நடப்பதைக் கவனிப்போம்—என்று கூறினுர். அதற்குள் மோட்டாரும் திருவல்லிக்கேணிக் கடற்கரையையடைந்தது. வண்டியை ஆலங்காத்தா பிள்ளை தெருவுக்குக்கொண்டு போகச் சொல்ல, வண்டியும் வைதேகியின் வீட்டு வாசலில் வந்து நின்றது. உடனே துப்பறிபவர் மாத்திரம் கீழே இறங்கி "நீங்களிருவரும் இங்கேயே இருங்கள்; நான் பக்கத்து வீட்டில் சில சமாசாரம் விசாரித்து வருகிறேன்" என்று கூறிவிட்டு நேரே வைதேகி வீட்டு வாசற்படியில் ஏறிப்பார்த்தார். கதவு பூட்டப்பட்டிருந்ததோடு முதல் நாளிரவில் ஜெமீந்தாரின் காலிலிருந்து கொட்டிய ரத்தம் உலர்ந்துபோன அடையாளம் மாத்திரம் தெரிந்ததைக் கண்டார். அங்குபக்கத்து வீட்டு வாசலில் ஒரு கிழவர் உட்கார்ந்திருந்ததைக் கண்டு, அவரைப் பார்த்துச் சிரித்த வண்ணம் "பெரியவரே ! நமஸ்காரம். இந்த வீட்டிலிருந்தவர்கள் எங்கே ? கதவு பூட்டி இருக்கிறதே. தங்களுக்குத் தெரியுமா ?" என்று நயமாகக் கேட்டார்.

பெரிய:—ஐயா ! இங்கிருக்கும் மனிதர்கள் தங்களுக்கு பந்துக்களா?

துப்பறிபவர்:—(பந்துக்கள் என்று சொன்னுல், உள் மர்மம் எதையாவது அவர் மறைத்துவிடுவாரோ என்ற யோசனையால், கிழவரிடம் வெகு வெறுப்பாகப் பேசத் துவக்கி) அவர்கள் எனக்கு உறவு

மில்லை, ஒன்றுமில்லை. என்னிடம் அவர்கள் பணம் கடன் வாங்கி இருக்கிறார்கள். அதை எத்தனை முறை கேட்டாலும் கொடுக்கவே இல்லை. அதற்காக நான் கோர்ட்டில் சம்மன் செய்து கிழவியைப் பிடித்து விடலாமென்று வந்திருக்கிறேன். அவர்களை முதலே காணவில்லையே. எங்கே போயிருக்கிறார்கள்? தெரியுமானால் தயவு செய்து சொல்லவேண்டும்—என்று தந்திரமாய்க் கேட்டார்.

உடனே கிழவர் சிரித்துக்கொண்டே "ஐயா! கிழவியை நீங்கள் பிடிப்பதற்குள்ளேயே அவளையவள் பேத்தி கொலை செய்து ஒரு வீணைப்பெட்டிக்குள் போட்டு மோசடியாக யாருக்கோ விற்று விட்டாளாம். அதற்காக நேற்று இரவு அந்தப் பெண்ணைப் போலீஸார் வந்து கைது செய்துகொண்டு போய்விட்டார்கள்" என்றார்.

அதைக் கேட்ட துப்பறிபவர் நிரம்பவும் திடுக்கிட்டவர் போல நடுங்கி, "ஐயோ! அந்தப் பெண்ணையா கைதுசெய்து விட்டார்கள்! அவள் அப்படிப்பட்ட காரியம் செய்திருப்பாளா. நான் அவர்களை அதிகம் கண்டதில்லை. ஆகையால் கேட்கிறேன். தயவுசெய்து சொல்லுங்கள்" என்றார்.

பெரியவர்—ஐயா அவர்களிடத்தில் நெருங்கிப் பழகுகிறவர்கள் யார்? அவர்கள் நமக்குச் சம்தையானஜாதி குலமாகவிருந்தால் நாம்அடிக்கடி போகவர இருக்கலாம். அவர்களோ தாசிகள். நமக்கு நெருங்கிய பழக்கம் எப்படி ஏற்படும்—என்றார். அதைக் கேட்டதும் ராஜாராம் வியந்தார். மனதிற்குள் அவர்கள் தாசி என்பதை யறியாமலேயே, அந்த ஜெமீந்தார், அவள்மீது அவ்வளவு மோகம்கொண்டு விட்டார் போல விருக்கிறது. சரி, எல்லாவற்றிற்கும் நாம் அவர்களுடைய ஜாதியை அவரிடம் தெரிவித்தால் அதனால் அவர் அதிகம் வருத்தப் படுவார் பாவம். ஆகையால் நாம் அதை வெளியிடாமலேயே, இந்த விசித்ரமான கேஸைக் கண்டுபிடிப்போம். இந்தப் பெரிய மனிதரின் தயவினால், அந்தப் பெண்ணின் சிறை நீங்கட்டும் என்ற ஜீவகாருண்யயத்தை எண்ணி, அதற்கு மேலும் பெரியவரோடு பேசத் தலைப்பட்டு "ஆமாம். அந்த வீட்டார் தாசி என்பது உண்மைதான்; ஆனாலும் அந்தப் பெண் அந்தத் தொழிலையே கைப்பிடித்து கேவலமான நிலைமையில் இருக்கிறாளா அல்லது ஒழுங்காக இருக்கிறாளா? கிழவி பெண்ணை எப்படி நடத்துகிறாள்?" என்று கேட்டார்.

பெரியவர் "பக்கத்திலிருந்தபடி அறிந்தது தானே நமக்குத் தெரியும். பெண்ணென்னவோ தங்கமான பெண்தான். அவள் அந்தக் குலத்தில் பிறப்பதற்கே தகாதவளென்று சொல்ல வேண்டும். அவ்வளவு உத்தமியாக இருக்கிறாள். கிழவியோ மகா ஒழுங்கீனமுடையவள். அவளைப்போலக் கெட்டவர்கள் யாருமிருக்க மாட்டார்கள். அவள் அந்தப் பெண்ணை எப்படி எப்படியோ கெடுக்க எண்ணியும் அந்தப் பெண்ணினிடத்தில் அவளுக்கு ஒன்றும் சாயவில்லை. அவள் நேற்று மாலையில்கூட அந்தப் பெண்ணை கன்னுபின்னு என்று திட்டியது எங்கள் மாடியில் காதில் விழுந்தது. அந்தப்பெண் என்னவோ அவள் சொல்படி கேட்கவில்லை. அந்தப் பெண்ணின் மீதில் சாட்டிய குற்றத்தை அவள் ஒருநாளும் செய்திருக்கமாட்டாள் என்பதுதான் எங்களுடைய எண்ணம். உள்சேதி யாருக்குத் தெரியும். திடீரென்று இராத்திரி பிடித்துக்கொண்டு போனதுதான் தெரியும். வேறு ஒன்றும் தெரியாது" என்றார்.

அதைக் கேட்ட ராஜாராம் "சரி, அவரவர்கள் தலைவிதிப்படி அவரவர்களனுபவிக்கின்றார்கள், என் பணத்திற்கு வழியில்லையே! என்ன செய்வேன்! ஒன்றா, இரண்டா? 2 ஆயிரம் ரூபாவாயிற்றே! என்ன செய்வேன்?" என்று சொல்லிக்கொண்டே, தமக்குள் "இதில் மோசம் நடந்திருக்கின்றதே யன்றி இது நிஜமான குற்றமல்லவென்பது தெளிவாய் என் புத்திக்குப் படுகிறது. ஆகையால் யாரோ வேண்டுமென்றுதான் இதைச் செய்திருக்கிறார்கள். யார் இம்மாதிரி செய்தார்களோ, அவர்களே தான் இந்தக் கதவையும் பூட்டி இருக்க வேண்டும். ஆகையால், இதற்குமேல் இன்னொரு நம்பர் பூட்டு யாராலும் திறக்கமுடியாததைப் பூட்டிவிட்டு நமது ஆளை இங்கே ஒரு கண் பார்த்துக்கொள்ளும்படி வைத்து விட்டால், பிறகு இதையார் திறக்க வருகிறார்களோ அவர்களைப்பார்த்துக் கொள்வோம்," என்று எண்ணியவராய்ப் பெரியவரைப் பார்த்து "ஐயா! இந்தக் கதவை யார் பூட்டினார்கள் என்பது தெரியுமா?" என்றார். அதற்கவர் "நான் கவனிக்கவில்லை" என்று கூற, உடனே "யார் பூட்டினாலும் சரி. நானும் அவர்கள் பேரில் பணத்துக்காக டிக்கிரிவாங்கி வந்திருக்கிறேனாகையால் இதை நானும் பூட்டிவிட்டுப் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டே ஒரு நம்பர் பூட்டை எடுத்துப் பூட்டிவிட்டு நேரே

வண்டியில் வந்து ஏறிக்கொண்டார். உடனே வண்டி புறப்பட்டது. ராஜாராம் "சரி நீங்கள் உங்கள் பங்களாவிற்கே போய் விடுங்கள். நான் இப்படியே இறங்கி மேலேயாகவேண்டியதைக் கவனிக்கிறேன்." என்றார். அதற்கு இருவரும் "தாங்கள் இவ்வளவு தூரம் உறுதி கூறும் போது எங்களுக்குக்கவலேயே இல்லை. ஆயினும் தாங்கள் வண்டி இல்லாமல் தனித்துப்போவது சரியில்லை. தாங்கள் இப்போது இந்த வண்டியையே உபயோகித்துக் கொண்டு எங்கே வேண்டுமானாலும் போகலாம். இது எங்கள் சொந்தவண்டி. நாங்கள் வாடகைமோட்டா ரமர்த்திக்கொண்டு வீடுபோய்ச் சேருகிறோம்" என்றார்கள். உடனே ராஜாராம்நாயுடு "வேண்டாம்; வேண்டாம். எனக்கு ஒரு ஜோலியா இரண்டு ஜோலியா? நான் சமயத்திற்குத் தகுந்தாற்போல நடந்து கொள்வேன். ஆகையால் நீங்கள் நேரே வீட்டிற்குப் போங்கள். நான் இப்படியே இறங்குகிறேன். என்னால் கூடிய சீக்கிரத்தில் உங்களுக்குத் தகவல் சொல்லியனுப்புகிறேன். கவலைப்பட வேண்டாம்." என்று சொல்லிக்கொண்டே வண்டியை விட்டுக் கீழே இறங்கி அவர்களை யனுப்பிவிட்டார்.

வண்டியை விட்டுக் கீழே இறங்கியவர் நேராக பைக்ராப்ட்ஸ் ரோட்டு வழியாகச் சென்றார். அவர் மனதில் பலவித கேஸ்கள் ஒன்றன் பின் ஒன்றாய் வந்து போராடிக் கொண்டே இருக்கின்றன. "நாடகத்தில் நடந்த திருட்டைக்கண்டு பிடிப்பதற்குள் கொலை ஒன்று வந்து சேர்ந்தது. அதன் தகவல் கண்டு பிடிப்பதற்குள், இந்தக் கேஸ் வந்து விட்டது. இவற்றில் எதை முன்னால் பிரயத்தனம் செய்து கண்டுபிடிப்பது? எல்லோருக்கும் எல்லாம் அவசரமாக விருக்கிறது. எதில் முன்னால் தலை இடுவதென்பதே தெரியவில்லை." என்று யோசித்துக் கொண்டே அங்கிருந்த ஒரு மோட்டாரை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு அதிலேறிச் சென்றார். மவுண்டுரோட் பிக்சர் பாலெஸ் கட்டிடத்திற்குப் பக்கத்துக் கட்டிடத்தில் எம். அண்டு எஸ். எம். ரயில்வே டிக்கட்டுகள் கொடுக்கப்பட, நூற்றுக்கணக்கான ஜனங்கள் டிக்கட்டுகள் வாங்கிக்கொண்டு சென்று கொண்டிருந்தார்கள். அந்தக் கும்பலின் நடுவில் ஒரு மனிதன் வெகு விசையாக டிக்கட்டு வாங்கி அதைத் தன் சட்டைப்பையில் போட்டுக்கொண்டு வீதியில் ஆயத்தமாய் நின்று கொண்டிருந்த மோட்டாரில் ஏறி உட்கார்ந்தான். வண்

டியும் நகர்ந்து விட்டது. அதைக் கவனித்துக் கொண்டிருந்த நமது ராஜாராம் அந்த ஆளைப் பார்த்த வுடனே அவருக்குச் சடக்கென்று ஒரு நினைவு வந்தது. அவர் அவனை உற்று உற்றுப் பார்த்தார். தம் மனதில் சந்தேகம் அதிகரித்ததே யன்றிக் குறையவில்லை. "இவன் பறங்கிக்காரன் மாதிரி வேஷம் தரித்திருந்தாலும், ஜாடை என்னவோ, இந்தப் புகைப்படத்திலிருப்பதைப் போலவே இருக்கிறது. ஆகையால் இவன் யாராகவிருந்தாலும் ? இவனைப் பின் தொடர்ந்தே செல்ல வேண்டும்" என்று உறுதி செய்துகொண்ட நாயுடு, தமது சட்டைப் பையில் இருந்த ஒரு புகைப்படத்தை எடுத்து அதையும் அந்த மனிதனின் முகத்தையும் உற்றுநோக்கினர். இரண்டின் முகச்சாயலும் ஒன்றாகவே இருக்கக்கண்டு அவர் முன் கூறியவாறு உறுதிசெய்து கொண்டு தமது வண்டியோட்டியைப் பார்த்து "அப்பா ! இந்த வண்டியை அதோ முன்னால் செல்கின்றதே அந்த வண்டியின் பின்னாலேயே அதற்குத் தெரியாமல் விடு. நான் யார் என்பது உனக்குத் தெரிந்திருந்தால் சரி, இல்லையேல் இந்தச் சீட்டைப் பார்த்துத் தெரிந்துகொள்" என்று தமது பெயர் பதித்த சீட்டைக் கொடுத்தார். அதைக் கண்ட வண்டியோட்டி திடுக்கிட்டு "ஆ ! தாங்களா ராஜாராம் நாயுடு ! எனக்குத்தெரியாது. ஐயா ! மன்னிக்கவேண்டும். உங்கள் பிரியப்படியே விடுகின்றேன்" என்று சொல்லி வணங்கி வண்டியை உடனே அந்த வண்டிக்குப் பின்னால் மெல்லத்துரத்திக் கொண்டே போனான். அந்த வண்டியும் அரைநாழிகை நேரம் சென்று, நுங்கம் பாக்கத்தில் ஒரு குறுகிய சந்தில் ஒரு வீட்டின் வாயிலில் வந்து நின்றது. அது நின்றதை யறிந்த ராஜாராம் தாமும் வண்டியை விட்டு இறங்கி வண்டியை அந்தக் குறுகிய சந்துக்கு வெளியிலுள்ள ரோட்டிலேயே நிறுத்திவிட்டுத் தாம் தம் சட்டை, தலைப்பாகை முதலியவைகளைக் கழற்றி வண்டியிலேயே வைத்துவிட்டு வண்டியோட்டியைப் பார்த்து "அப்பா! நீ வண்டியை இங்கேயே நிறுத்தி வைத்துக்கொண்டு இந்தச் சட்டை முதலியவைகளைப் பார்த்துக்கொண்டிரு. நான் வந்துவிடுகிறேன். போலீஸார் யாராகிலும் இங்கு என் வண்டி நிற்கிறதென்று கேட்டால், இது இந்த எதிர் வீட்டுக்காரர் வாடகைக்கு அமர்த்தி வந்திருக்கிறார், அவருக்காக நிற்கின்றது என்று சொல்லிவிட்டுப் பேசாமலிருந்துவிடு. என் பெயரை மாத்திரம் சொல்லாதே" என்று கூறி

விட்டு அந்தக் குறுகிய சந்தில் முன் வந்த வண்டி நின்ற வீட்டண்டை மெல்ல வந்துசேர்ந்தார். அப்போது இரவு மணி சுமார் 7 இருக்கலாம். நிரம்பவும் குறுகலாயிருந்த அந்தச் சந்தில் திக்குக்கொன்றாய்ச் சில வீடுகளே இருந்தமையால், அது அதிக ஜனநடமாட்டமற்று நிச்சப்தமாக விருந்தது. ஆங்காங்கு மின்சார விளக்குகள் மங்கலாய் எரிந்துகொண்டிருந்தன. அங்குச் சென்ற ராஜாராம் மெதுவாக அந்த வீட்டை உற்று நோக்கினர். அது கேவலம் சிறிய குட்டிச்சுவர்கள் நிறைந்த பாழும் வீடுபோலக் காணப்பட்டது. அவர் மெல்ல அந்த வீட்டின் குறட்டின்மேல் ஏறினர். மோட்டார்காரில் வண்டியோட்டி இல்லை என்பதை அறிந்ததும், அவர் இன்னும் இரண்டடி எடுத்துவைத்தார். வீதிக்கதவு தாளிடப்பெற்றிருந்ததை யறிந்து அதன் சாவிபோடும் துவாரத்தினல் தமது விழியின் பார்வையை உள்ளே செலுத்தினர். எங்கும் ஓரே இருள்மயமா யிருந்ததேயன்றி அவர் கண்ணிற்கு வெளிச்சமே தெரியவில்லை. ஒருகால் நடைக்கதவையும் தாளிட்டிருக்குமோ என்று எண்ணி வீதியில் வந்துவிட்டார். அந்த வீட்டிற்கு வலதுபக்கத்தில் வீடே இராமல், சிறிய சந்து போலப் போவதைக் கண்டு அவர் அந்தவழியே சென்று, அந்த வீட்டைக் கவனித்தார். அவருக்கு அங்கு எதுவும் புலப்படவில்லை. இடிந்து பாழாயிருக்கும் இடமெல்லாம் இருளடைந்திருக்கின்றது. வேறு இடத்தில் வெளிச்சம் தெரியவில்லை. அவர் மேலும் அந்தக் குட்டிச் சுவரைப் பார்த்துக்கொண்டே போக, அங்கு யாரோ பேசும் அரவம் கேட்டது. அதை என்னவென்று கவனித்துக் கேட்டும் அது என்னவென்று விவரமாய் அவர் காதிற்குக் கேட்கவில்லை. "சரி; இது 2-வது கட்டாகவோ, அல்லது 3வது கட்டாகவோ இருக்க வேண்டும். இவ்வளவு தூரத்திற்குமேல் வந்த நாம் வெறுமை போகலாகாது, இதை சந்தேகம் தீர ஒருமுறை பார்த்தேதான் தீரவேண்டும்" என்று எண்ணியவராய், ஓசை செய்யாமல் மெல்ல அந்தக் குட்டிச்சுவரின்மேலேறி அந்த அரவம் கேட்ட இடத்திற்குமே லிருந்த ஓட்டின்மேல் மெல்ல சந்தடி செய்யாமல் பதுங்கிப் பதுங்கி ஏறினர். அங்குக் கண்ணுடியே காணப்படவில்லை. "மேலும் நடந்தால் ஓடு நொறுங்கும் ஓசையைக்கேட்டு விடுவார்கள். இனிமேல் நடக்காமல் தான் உபாயம் செய்யவேண்டும்" என்று எண்ணியவராய் மெல்ல

ஓசை செய்யாமல் அடுக்கியிருந்த ஓட்டை எடுத்தார். இரண்டு ஓடுகளை எடுத்ததும், அவர் பார்வையை உள்ளே செலுத்தினர். அங்கு அப்பொழுது வண்டியிலேறி வந்த மனிதன் ஒரு பெட்டியில் அவசர அவசரமாய் என்னவோ சாமான்களை வைத்துப் பூட்டியதை யறிந்தார். அதற்குள் அங்கு ஒரு கிழவி தோன்றி "தம்பி! என் வேலை தீர்ந்துவிட்டது." என்றுள்.

உடனே அந்த மனிதன் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு பெட்டியையும் எடுத்துக்கொண்டு வெளியில் வந்தான். வரும்போது "பாட்டி! நாளை காலை 10-மணி வரையில் தாளும்படியான அளவு போட்டையா? அதற்குள் தெளிந்துவிட்டால் கஷ்டம்" என்றுன். அதற்குக் கிழவி "அப்பா! நானென்ன இன்னிக்கு புதுமனுஷியா? இந்த வேலையை எத்தனைதரம் நான் செய்ததில்லை. இன்னிக்கு இது புதுசா என்ன? 10மணி என்ன, 11 மணிக்குக்கூட தாங்கும்; நன்றுய் திட்டமான அளவு செலுத்தி நீ சொன்னதுபோலவே வாழை இலைக் கட்டு சுருட்டுவதுபோல அவளை ஒரு பாயில் வைத்துச் சுருட்டி மேலே நாலைந்து பெரிய முழுத் தலைவாழை இலைகளை வைத்துச் சுருட்டி அதற்குமேல் தலைகால் முதலியது தெரியாமல், வைக்கோலை யடைத்துக் கட்டி வைத்துவிட்டேன். வைக்கோல் எதற்காக வைத்தேன் தெரியுமா? அது பார்ப்பதற்குச் சந்தேகம் தோன்றுது, ஒன்று. அதற்குள்ளிருக்கும் வஸ்துவை வெளியில் தெரியாமல் மூடிக்கொள்ளும். அதனுல் காற்றும் உள்ளே சென்று வெளியே வரும். ஆகையினுல் மூச்சு விடுவதும் அந்த வைக்கோல் வழியாக வெளியில் வந்து காற்றும் உள்ளே வீசும்பொருட்டு யுக்தியாய் அதை வைத்துக் கட்டி இருக்கிறேன். ஆனுல் ரொம்ப அழுத்தமாகக் கட்டவில்லை. அதை எடுக்கும் போது ஜாக்ரதையாய் எடுத்து வண்டியில் வைத்துவிட்டால், பிறகு நீ இறங்குகிற இடத்தில் ஜாக்ரதையாய் இறக்கி வண்டியில் வைத்துவிடு. நாழிகையாய்விட்டது." என்றுள். உடனே அவன் "பேஷ்! பாட்டி! உன் புத்தி வெகு திறமையாய் வேலை செய்திருக்கிறது. நான் போய் வருகிறேன். போன வுடன் நம்முடையவர் இங்கு வருவார். ஜாக்ரதையாக இரு. எதையாவது மூச்சுவிடப் போகிறுய்" என்றுன். அவ்விதம் அவர்கள் குசுகுசு என்று பேசியதை வெகு கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த ராஜாராம் "சரி; நமது சந்தேகம் பாதி

நிவர்த்தியாகிவிட்டது. இன்னும் இவனுடன் கூடவே சென்று வாழைக் கட்டை அவிழ்த்துவிட வேண்டும்'' என்று எண்ணியவராய் மெல்ல இறங்கி முன்போல வீதியில் வந்து, மறைந்து நின்றுகொண்டு வண்டியில் ஏறுவதைப் பார்க்க நின்றார். அந்த வீட்டு வாயில் கதவு திறக்கப்பட்டது. உடனே வண்டியோட்டி சில பெட்டி சாமான்கள் முதலியவற்றைவண்டியின் பின்புறம் வைத்துக் கட்டிய பிறகு,எல்லோரும் வாழை இலைக்கட்டை மெல்லத் தூக்கிக்கொண்டு வந்தார்கள்.வண்டியில் உட்காரும் இடத்தில் அதை வைத்துவிட்டு வண்டியோட்டியும் இன்னொருவனும் முன்பக்கத்தில் வந்து உட்கார்ந்தார்கள். அந்த வண்டியில் வந்த ஆசாமி முதலில் பறங்கிக்காரன் போல வந்தவன் அப்பொழுது பெரிய சாவுகார்போலவே வேஷ்டி கட்டிக்கொண்டு அதற்குத் தக்க சொக்காய், தலைக்குட்டை முதலியவைகளை யணிந்துகொண்டு கையில் ஒரு பிரம்பும் எடுத்துக்கொண்டு வந்தமர்ந்ததைக் கண்ட ராஜாராம், "ஆஹா! இப்படியா வேஷம் கற்றிருக்கிறாய்! சரிதான்'' என்று மனதிற்குள் உறுமிக்கொண்டே அந்த இடத்தைவிட்டு வண்டி புறப்பட்டதும்,வெளிக்கிளம்பி அவசரமாகத் தம் வண்டியில் ஏறிக்கொண்டு அதைத் துரத்தி விடச் செய்தார். அவ்வாறே வண்டிகள் முன்னும் பின்னுமாகச் சென்று சென்னை சென்டிரல் ஸ்டேஷனை யடைந்தன. உடனே அந்த முதல் வண்டியாசாமிகள் இறங்கி மணியைப் பார்த்தார்கள். 8 அடிக்க 5 நிமிஷமே இருந்தது. முன்போலவே வண்டியோட்டி அந்த சாமான்களை எல்லாம் முதல் வகுப்பு வண்டியில் வைத்து விட்டு மரியாதையாக தூர நின்றான். எஜமானன் அவனிடம் ஏதோ சொல்லி யனுப்பிவிட்டுத் தாமும் வந்து வண்டியில் உட்கார்ந்தார். அவைகளை எல்லாம் தூரவிருந்து பார்த்திருந்த ராஜாராம் நாயுடு தமது சட்டை முதலியவற்றையும் தம்மிடம் எப்போதும் கையிருப்பில் வைத்துக் கொண்டிருக்கும் சில சாமான்களையும் ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டு தாம் ஒரு நாட்டுப்புறத்தான் போல முழங்காலுக்கு மேலே ஒரு வேஷ்டியைக் கட்டிக்கொண்டு தலையில் பெரிய முண்டாசாகத் தமது அங்கவஸ்திரத்தையும் தலைக்குட்டைக்கு மேல் கட்டிக்கொண்டு மேலுக்குத் துணி இல்லாமல் அந்த மூட்டையைத் தூக்கித் தலைமேல் வைத்துக்கொண்டு வண்டியோட்டி யிடம், "அப்பா! நீ போய்வா, இந்தா இதைப்பெற்றுக்கொள்,'' என்று சொல்லிக்கொண்டே

பத்து ரூபாய் நோட்டு இரண்டை அவன் கையில் கொடுத்து விட்டு நாட்டுப்புறமனிதன் போலவே ஓடியோடி நடந்து கொண்டே அந்த வண்டியில் வந்து ரயில் புறப்படும் சமயம் ஏறினர். அதில் முன்னுல் உட்கார்ந்திருந்த மனிதன் "இதில் யாரும் ஏறக்கூடாது. எங்கள் மனுஷ் யாள் வெளியே போயிருக்கிருர்கள்; அதோ வந்து விடுவார்கள்; ஆகை யால் இதில் இடமில்லை" என்று சொல்லிக்கொண்டே இருக்கும் போது, அவனது வார்த்தைகளை அவர் கேளாதவர் போல வண்டியில் ஏறி அந்த மனிதனைப் பாராமலேயே தாம் ஒரு நாட்டுப்புறத் துப் பயித்தியம்போல நடிக்கவேண்டுமென்று எண்ணி உட்கார்ந்தார். உடனே வண்டி கூவிக்கொண்டே கிளம்பிவிட்டது. அவர் ஏறிய தைத் தடுத்தும் அவர் ஏறி உட்கார்ந்ததைக் கண்ட அந்த மனி தன் "இவன் எவனே நாட்டுப்புறம்; உட்கார்ந்து போகட்டும்" என்று பேசாமலிருந்துவிட்டான். ராஜாராம் நாயுடு தான் அன்று தான் புதிதாய் முதல் வகுப்பு வண்டியைக் கண்டவர்போல அந்த வண்டி யில் தைத்திருந்த மெத்தையைப் பார்ப்பதும், தடவுவதும், சந்தோஷம் பொங்கச் சிரிப்பதும் "ஆஹா! என்ன மெத்துனு இருக்குது!" என்று வாய் விட்டுச்சொல்வதும், அதில் படுத்துக்கொள்வதும், பிறகு எழுந்திருப்பதும், தலையை ஆட்டி ஆட்டிச் சிரிப்பதுமாய்ப் பயித்தி யம் போலச்செய்வதை எல்லாம் பார்த்தால், கூட உட்கார்ந்திருந்த மனிதனுக்குச் சிரிப்புப் பொங்குகின்றது. "இவன் அசல் பயித்தியம் போல இருக்கிறதே. மெத்தையைக் கண்டு இவ்விதம் கூத்தாடுகின் றதே" என்று எண்ணிச் சிரித்துக்கொண்டே யிருந்தான். வண்டி போய்க்கொண்டேயிருக்கிறது. ராஜாராம்நாயுடு பயித்தியம் போலக் கொஞ்சம் நேரம் ஆடிப்பாடி விட்டு, அசைந்து நித்திரை செய் பவரைப்போல மல்லாந்து கொண்டு படுத்து விட்டார். அவர் மனதிலோ சொல்லறியா எண்ணங்கள் தோன்றி வதைக்கின்றன. "இவன் ஒரு திருடன் என்பதற்குச் சந்தேகமே யில்லை. மேலும் இந்தப் படத்திலுள்ள ஆசாமி தான் இவன் என்பதற்கு ஐயமே இல்லை. இந்த வாழை இலையில் இருப்பது பெண் என்பது பரிஷ்காரமாய் விளங்கிவிட்டது. ஆகையால் இவனைத்தக்க சமய த்தில் பிடித்துவிடுவதொன்றுதான் பாக்கி. நாம் அந்த இலைக் குள்ளிருக்கும் பெண்ணை வெளியிலெடுத்த பிறகு தான் இவனைப்

பிடிக்கவேண்டுமென்று எண்ணினாலோ, அது இலகுவில் ஆகும் வேலையல்ல. நாம் வாழை இலையை யவிழ்க்கும் தருணம் இவன் நம்முடைய தலைக்கே வழிதேடுவான். அல்லது ஓடி விட்டாலும் விடுவான். ஆகையால் இவனைத் தக்க பெரிய ஸ்டேஷனில் தண்ணீர் குடிக்க இறங்குவது போல இறங்கிப் போலீஸோடு வந்து பிடித்து விடுவதே நலம். நாம் இவனைத் தொடர்ந்து வந்த ஜாடையே தெரியாமல் செய்ய வேண்டும். இவனை அங்கேயே கூடப் பிடித்திருக்கலாம். ஆனால் இப்போது இவன், வாழை இலைப்பெண் இரண்டு பேரையும் ஏககாலத்தில் பிடிக்கலாம். அப்போது முயற்சித்திருந்தால் இவர்கள் இருவரும் அகப்படுவது கஷ்டம். அதோடு நம்மையும் இவன் என்னவாவது செய்ய எத்தனித்திருப்பான். எல்லாவற்றையும் யோசித்தே தான் இவ்விதம் செய்வது உசிதம் என்று வந்து விட்டேன்.” என்று பலவாறாய் யோசித்துக்கொண்டே நன்றாகத் தூங்குகின்றவர் போலக் குறட்டையை விட்டுக்கொண்டே படுத்திருந்தார். கூடவிருந்த ஆசாமி அவரை சுத்தப் பயித்தியமென்றே எண்ணியிருந்தானாகையாலும், அவர் நன்றாய்த் தூங்கிவிட்டார் என்று எண்ணியதாலும் மெல்ல அங்குக்கீழே கிடத்தியிருந்த வாழை இலைக் கட்டை மெல்ல நகர்த்தி, அந்தக் கட்டை கொஞ்சம் அவிழ்த்துக்காற்று உள்ளே செல்லும்படி செய்து கட்டி விடலாம் என்று எண்ணியவனாய்க் கட்டை இழுத்தான். நாயுடு அவைகளை எல்லாம் மெல்ல கால் கண்ணால் பார்த்துக்கொண்டே தம்கையை முகத்தின் மேல் வைத்துக்கொண்டு இன்னும் பலமான குறட்டைகள் விட்டுக்கொண்டே இருந்தார். உடனே அந்த ஆசாமி கட்டை கொஞ்சம் அவிழ்த்தான். அந்தச் சமயம் ராஜாராம் திடீரென்று தன்னைப் பாம்போ, தேளோ கடித்து விட்டமாதிரி ‘ஐயோ, ஐயோ’ என்று கூச்சலிட்டுக்கொண்டே திடீரென்று உருண்டு கீழே விழுந்து புரண்டு அரை நிமிஷத்திற்குள் வாழை இலைக்கட்டண்டை வந்து “ஐயோ! என்னை என்னவோ கடித்து விட்டதே! பாம்போ. தேளோ தெரியவில்லையே! அடி, எம் பொஞ்சாதி! விளக்குக்கொண்டு வாடீ. தொடப் பக்கட்டை கொண்டு வாடீ” என்று பிதற்றிக்கொண்டே அந்தக் கட்டை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டார்.

கட்டையவிழ்த்த மனிதன் தான் சற்று கூட எதிர்பாராவிதமாய் நன்றாய்த் தூங்கிக்கொண்டிருந்த மனிதன் திடீரென்று அவ்விதம் கீழேவிழுந்து புரண்டு, இலைக்கட்டைப் பிடித்துக்கொண்டுப் பிதற்றியதைக் கண்டவுடன் அவன் பாடு குலை நடுக்கமெடுத்துவிட்டது. இன்னது செய்வதென்பதை யறியாமல் பிரமை பிடித்தவன் போலத் திடுக்கிட்டு, உடனே அவர்கையைப் பிடித்து அப்புறம் தள்ளிவிட்டு, இலையை இழுத்துப் பலகையின் கீழே தள்ளிவிட்டு "என்ன, ஐயா? இது உம்முடைய வீடு என்று எண்ணினீரா? இங்கு உங்கள் பெண்ஜாதி எங்கு வந்தாள்? உம்மை என்ன கடித்து விட்டது? எழுந்திரும் பார்க்கலாம்" என்று அவரை மெல்ல இலைக்கட்டைவிட்டு அப்புறம் திருப்பினால் போதும் என்று எண்ணியவனாய் ராஜாராமின் கையைப் பிடித்துத்தூக்கினான். அவன் தன்னைத் தந்திரமாய் விலக்க எண்ணியதை யறிந்த ராஜாராம் அதற்கு மேல் தந்திரமாய் எழுந்து நின்று. "ஓஹோ! இது என் வீடல்ல! இது ரயில் வண்டியா? நான் தூங்கினபோது கனாக்கண்டேன்; என் வீட்டில் என்னைத் தேள் கொட்டிவிட்டதுபோல. அதான் புரண்டேன். ஹேக்ஹேக்! இது மெத்தை போட்ட ரயிலாச்சே. தெரிஞ்சுது! தெரிஞ்சுது" என்று பல்லிளித்துக்கொண்டே கூறியவாறு மறுபடியும் தாம் உட்கார்ந்திருந்த பலகையிலேயே உட்கார்ந்துகொண்டார். "சரி இதிலிருப்பது ஓர் பெண்பிள்ளை தான். நான் பிடித்தபிடியில் நன்றாய்த்தெரிந்து விட்டது. ஆகையால் இப்பொழுது வரப்போகிற பெரிய ஸ்டேஷனில் பிடித்து விடவேண்டும். நாம் சங்கிலியை அசைத்து மனிதரை வரவழைத்துப் பிடிபதற்குள், இவன் எவ்விதமாவது தந்திரம்செய்து விடுவான். இவனுக்கே தெரியாமல் பிடிப்பதுதான் உசிதம்." என்று எண்ணியவராய் உட்கார்ந்திருந்தார். அந்தச் சமயம் ஒரு ஸ்டேஷனில் வண்டி நின்றது. அது சிறிய ஸ்டேஷனாகையால் வண்டி அதிக நேரம் நிற்காமல் உடனே கிளம்பிவிட்டது. அந்தச் சமயம் ஒரு மனிதர் அந்த வண்டியை நோக்கி விசையாய் ஓடிவந்து, ராஜாராம் உட்கார்ந்திருப்பதைக் கண்டு சிரித்த முகத்தோடு "என்ன ராஜாராம் நாயுடுகாரு, நீங்கள் இப்படி உட்கார்ந்திருக்கிறீர்கள்? பேஷ். இதுவும் ஒரு அழகாகவே இருக்கிறது, என்ன விசேஷம்? பார்த்து வெகு நாளாயிற்றே" என்று சரமாரியாய்ச் சொல்லிக்கொண்டே வந்து நின்றவுடன், ராஜா

ராம் வாயைத் திறக்காமல், பேசாதிருக்கும்படி சைகை செய்ததைக் கண்ட வந்தமனிதன் அதை யறிந்துகொண்டு மெல்ல நழுவிவிட்டான். வண்டியும் வேகமாகச் செல்ல ஆரம்பித்தது. அங்குவந்த மனிதன், "என்ன ராஜாராம் நாயுடு" என்று கூறியதைக் கேட்டவுடன், அங்கு உட்கார்ந்திருந்த மனிதனுக்குத்தலைமேல் பெரிய இடிசேர்ந்தாற்போல விழுந்துவிட்ட மாதிரியான குடல் நடுக்கமெடுத்து விட்டது. அந்தப் பெயரைக் கேட்டமாத்திரத்தில், அவன் உயிரே கிளம்பிவிட்டமாதிரி யாய் விட்டது. இன்னதென்று விவரிக்க இயலாத வேதனைகள் வந்து அவனைச் சுற்றிக்கொண்டன. அப்பொழுது உயிரோடு பூமியிலிருக்கி ருேமா, அல்லது, உயிர் ஆகாயத்தில் பறக்கின்றதா என்ற சந்தேகம் அவனுக்குத் தோன்றி விட்டது. "ஐயோ ! நாம் நம்மையறியாமல் கூடவே நெருப்பைக் கட்டிக்கொண்ட மாதிரியாக இந்தப் பாவி வந்து நமக்கு எமனைச் சேர்ந்தானே. ஐயோ ! இவன் ஏதோ மோசக் கருத் தோடல்லவா வந்து இந்த வண்டியில் ஏறி பைத்தியம்போல நடித்துக் கீழே விழுந்து நம்முடைய ரகஸியத்தை அறிந்து கொண்டானே. ஐயோ! இவனைப் பைத்தியம் என்று நம்பி மோசம் போய்விட்டோமே. துப்பற்றியும் ராஜாராம் நாயுடுவா இவன்? அடடா! இவனிடமிருந்து நாம் இனி தப்புவது, எமன் கையிலிருந்து தப்புவதுபோல் தான். பாவி இவன் எப்படியோ நமது ரகஸியத்தைக் கண்டு கொண்டே வந்திருக்கிறுனே. இவனை நாம் உயிரோடு விட்டால் குடி கெட்டது. இவன் ஊரையே கெடுக்கவந்த கொலைபாதகன். பெயரைக் கேட்ட வுடன் பதறிவிழும்படியான காலனுக வல்லவா இவன் தோன்றி இருக்கிறுன். இவன் நம்முடைய ரகஸியத்தைக் கட்டாயம் நன்று யறிந்து விட்டான் என்பதில் ஐயமேயில்லை. நாம் அடுத்த ஸ்டேஷனி னில் வண்டி நிற்பதற்குள் இவனை ஒரு வழிசெய்து விடவேண்டும்" என்று எண்ணியவனுய் ஒன்றையும் விளக்கிக்காட்டிக் கொள்ளாம லிருந்தான்.

அந்தச் சமயம் இரவு பதினெருமணிக்கு மேலாய் விட்டது. வண் டிக்கு வெளியே ஒரே இருள் கருக்கலிட்டுக் கொண்டிருக்கிறது. மழை பெய்ய சிலீர் சிலீர் என்று காற்று அடித்துக்கொண்டே இருப்பதால் இன்னுமுள்ள வண்டிகளின் கதவுகளெல்லாம் சாத்திவைக்கப்பட்டிருந் தன. ராஜாராம் நாயுடு பக்கத்தில் வருகிற ஸ்டேஷன் நெல்லூராக

இருக்கவேண்டும், அதில் தான் நாம் வேலையை முடித்துவிட வேண்டும் என்று எண்ணியவராய்ப் பேசாது வெளிப்புறத்தைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தார். அந்தச் சமயம் திடீரென்று அங்கு உட்கார்ந்திருந்த மனிதன் அவருக்குப் பின்னுல் வந்து, தன் கையில் ஆயத்தமாய் வைத்துக்கொண்டிருந்த ஒரு சிறிய புட்டியை எடுத்து ராஜாராம் எதிர்பாராவிதமாய் அதை அவர் மூக்கில் நன்ருய்ப் படும்படி தலையைப் பின்புறம் நிமிர்த்தி மூக்கில் உள்ளேயே செல்லும் வண்ணம் கொட்டிவிட்டு மற்ருெரு கையால் அவரைத் திமிற விடாமல் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு அந்த மருந்தை நன்ருய் சுவாச வழியாய் உள்ளே, பலமாகப் பிடித்துக்கொண்டு, செலுத்திவிட்டான்.

ராஜாராம் நாயுடு தாம் என்னவோ யோசித்துக்கொண்டு ஸ்டேஷன் வருகையை எதிர்பார்த்திருந்த சமயம், தமக்கு அவன் அவ்விதம் செய்யப்போகிருன் என்பதை உணராமல் உட்கார்ந்திருந்த தருணம் அவன் அசைப்பில் அவ்விதம் செய்துவிட்டதால் அவர் திமிறுவதற்குள் மருந்தே மூக்கின் உள்ளே சென்று விட்டபடியால்; அது உடனே மண்டைக்கு ஏறிவிட்டது. அதற்குமேல் ஒன்றும் செய்யமுடியாமல் அவர் மயங்கிப் பிணம்போலாய்விட்டார். உடனே அந்த ஆசாமி அவரை விட்டுவிட்டுக் கதவைத் திறந்து நாற்புறமும் பார்த்தான். எங்கும் நிச்சப்தமாயும் மழை பெய்துகொண்டும் இருந்தது. உடனே அவன் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து ராஜாராம் நாயுடுவைத் தூக்கி வண்டி போய்க்கொண்டே இருக்கும் சமயம் கீழே தள்ளிவிட்டான். அதே சமயம் எதிர்ப்பக்கத்திலிருந்து ஒரு கூட்ஸ் வண்டி வெகு வேகமாய் வந்துவிட்டது. இரண்டு வண்டிக்கும் நடுவில் ராஜாராம் நாயுடுவைத் தள்ளிவிட்ட மனிதன் அந்தக் கதவைத் தாளிட்டுக்கொண்டு முன்போலவே அமர்ந்தான். அந்தோ! ஊருக்கெல்லாம் புலிபோலிருந்த மனிதன் அந்தச் சிறிய எலி கையில் ஒரு நொடியில் அகப்பட்டுக்கொண்டு உயிர் துறக்க நேர்ந்துவிடுமோ! அந்த வண்டியும் வேகமாய்ப் போய்க்கொண்டிருக்கிறது. எதிர்வண்டியும் வேகமாய் வந்துவிட்டது. ராஜாராம் கதி என்ன வாயதோ தெரியவில்லை.

* * * * * * * *

செஞ்சிக்கோட்டை ஜெமீந்தாரும் பரமசிவனும், ராஜாராமிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு வண்டியோடு சென்றவர்கள் நேராக சிந்தாதிரிப்பேட்டை பங்களாவை யடைந்தார்கள்.

அங்கு அவனது தாயும், தமக்கையும் அவர் வரவை வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். புத்திரன் வந்தவுடன் முன்போலவே ஜெமீந்தாரை உள்ளே கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். உடனே பார்வதியம்மாள் மகனருகில் வந்து, "தம்பி! என்ன சேதி? போன காரியம் ஏதாவது தகவல் புரிந்ததா? வைத்தியரிடம் போனையா?" என்று கேட்டாள். அதற்குப் பரமசிவன் நடந்த வரலாறுகளையெல்லாம் சொன்னன். அதைக் கேட்டு இருவரும் "தம்பி! இனி பயப்படாதே. எப்படியும் அவர் கண்டுபிடித்து விடுவார்." என்று தேறுதல் கூறினர்கள். உடனே பரமசிவனும் சற்றுநேரம் உட்கார்ந்து ஜெமீந்தாருக்குத் தேறுதல் சொல்லிவிட்டு உத்தரவு பெற்றுக்கொண்டு தன் ஜாகைக்குப் போய்விட்டான். பிறகு பார்வதியம்மாளும் கமலமும் எவ்வளவு தூரம் சாப்பிடக் கூப்பிட்டும், அதற்கு ஜெமீந்தார் "எனக்குப் பசியே இல்லை. காலையில் பார்த்துக்கொள்வோம். என்னை வற்புறுத்தவேண்டாம்" என்று கூறிவிட்டுத் தமது படுக்கையில் படுத்தார். பிறகு தாயும் மகளும் ஏதோ தம் வேலையைப் பார்த்துக் கொண்டு வந்து படுத்தார்கள்.

படுக்கையில் படுத்த ஜெமீந்தார் ராமாமிருத முதலியார் (இனி அவரை நாம் பெயரைச் சொல்லியே அழைப்போம்) தூக்கமே பிடிக்காமல் ஏக்கமே குடிகொண்டு புரளவாரம்பித்தார். அவர் எவ்வளவு நாழிகை மறக்க முயன்றாலும், வைதேகியின் உருவம் அவர் கண்ணெதிரில் நிற்பதுபோலவே தோன்றுகின்றது. அவர் வைதேகியை எண்ணி நெக்கு நெக்குருகிப் பாகாய்க் கரைந்துகொண்டே இருந்தார். அவர் மனமாகிய கடலில் எண்ணங்களாகிய அலைகள் மோதிக்கொண்டே இருக்கின்றன. என்ன செய்வார் பாவம்? "ஆ மாதர்க்கரசியே! மாற்றிலா மாமணியே! யாதுக்கு என்னிடம் வாது செய்து, உன் சந்திர பிம்பம்போன்ற முகத்தைக் காட்டி மறைத்துச் செல்கின்றாய்? கண்மணி! ஆ! உனது அழகிய வதனம் விசனத்தால் பீடிக்கப்பட்டு, கண்ணில் நீர் பெருகக் கையைப் பிசைந்துகொண்டு

மருள மருள மான்போல விழித்தவண்ணம், இடைநெளிந்து நெளிந்து ஆட, தலைப்பின்னல் பாம்பின் படம்போல் ஆட, நீ நின்ற கோலத்தை என்னவென்று சொல்வேன் !

விருத்தம். செஞ்சுருட்டி.

மின்னல் நேரிடையோ ! மானின் விழியிணைப்
பழிக்கும் நோக்கோ !
துன்னிய பின்னல் பாம்பின் துகளறு
படமோ ! பாவை
தன்னெழில் முகமோ மேகம் தழுவிய
திங்கள் தானோ !
கன்னியை நோக்க நெஞ்சம் கலங்குதல்
வியப்பே யாமோ !

ஆஹா! மதனமனோஹர சிங்காரி ! உனது அழகில் எதைத்தான் எடுத்துக்கூறல் முடியும் ? இடையோ இருப்பதே சந்தேகமாக விருக்கிறது. உனது முகத்தையும் நோக்கி வானையும் நோக்கினால், எந்த மதி நிஜமானவன் என்ற சந்தேகம் போராடுகின்றது. உனது குரலின் ஒலியோ என் காதைவிட்டுச் சற்றும் அகலவே இல்லை. இப்போது தான் கணீர் என்ற சப்தத்தோடு நீ பேசுவதுபோல என் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. கண்ணினிரு கருமணியே ! என் எண்ணத்தை ஒரு கணப்பொழுதில் கொள்ளை கொள்ளும் திறமை உன்னிடம் தான் இருக்கிறதென்று என்னிடம் அதைக் காட்டி வாட்டுகின்றாயோ! ஐயோ ! அம்புலிபோன்ற உன் அழகிய முகத்தைக் காணாமல் ஆம்பல்போல நான் காலைமுதல் வாடுவது உனக்குச் சகிக்கின்றதா? வேண்டாம்; வேண்டாம். பெண்மணி! நீ என்னை இப்படி ஏமாற்றாதே. கண்ணெதிரில் இப்போது நின்றுகாக்ஷி தந்து மறுபடிமறைவது தகுமா? ஆ! என் ஆருயிர் அமிர்தவல்லி! "நானே உன்னைவிட்டுப் போய்விட்டேனே. இனி உனக்கு வேறொருத்தியும் வேண்டாம்" என்றுநீயே அவ்விதம் அவளைக்கூடத்தடுத்து அழைத்துக்கொண்டுபோய் விடுகிறாயோ? "ஐயோ! என்னை விஷம் வைத்துக் கொன்றுவிட்டபாதகன் அவன்; அவனிடம் நீ போகாதே' என்று எச்சரிக்கை செய்து விடுகிறாயோ? எனது

அபரஞ்சித் தங்கமே! அமிருத மங்கையே! என் மேல் கோபிக்காமல் என்னையும் உன்னண்டையில் அழைத்துக் கொள்ள மாட்டாயா? அல்லது நீமுன்னின்று உன்னைப்போலவே எனக்கு ஒரு மங்கையைக்காட்டி ஆசையை ஊட்டி விட்ட கண்ணுளை எனக்குக் கொண்டுவிட மாட்டாயா? என்மேல் நீயே கோபம் பாராட்டலாமா? அமிர்தவல்லி! அமிர்தவல்லி! எனக்கு இந்த இரண்டு காரியத்தில் ஒன்று நீ செய்து தான் தீரவேண்டும். உன்னைத் தான் நான் என் குலதெய்வமாக எண்ணுகிறேன். என்னை வருந்தவிடாதே. என் கண்ணே!" என்று பலவாருய்ப் பிதற்றிக்கொண்டே தூக்கமின்றித்துடித்துக் கொண்டே இருந்தார். அவருடைய பரிதாபத்தைக் கண்டு இருளென்னும் கள்ளனை விலக்கும் பொருட்டுக் கதிரவன் தன் கிரணங்களோடு கீழ்த்திசையில் உதித்து விட்டான்.

காலை 5 மணிக்கு அவர் சற்று கண்ணை மூடிய சமயம் வைதேகி தன்னுேடு முந்தின நாள் பேசியதுபோல அன்றும் பேசுவதாகக் கனவு கண்டு திடுக்கிட்டு விழித்துக்கொண்டு எழுந்தார். மணி 7 அடிக்கும் சமயமாயிருந்தது. எழுந்து நொண்டி, நொண்டி நடக்க வாரம்பித்துத் தமது காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வழக்கம்போல தினம் வரும் காலைப்பத்திரிகையைக் (தினவர்த்தமானி) கையிலெடுத்தார். அதற்குள் அவருடைய தாயார் அவரிடம் வந்து "அப்பா! கொஞ்சம் ஏதாவது ஆகாரம் செய்து விட்டுப் பிறகு பேபர் படிக்கலாமப்பா. என் கண்ணே! இங்கேயே கொண்டு வரட்டுமா." என்று வெகு உருக்கத்தோடு கேட்டாள். அதைக்கேட்ட ராமாமிருதம் "அம்மா! எனக்கு வயிறு மந்தமாகவே இருக்கிறது. நான் இன்னும் சற்று நேரம் கழித்துச்சாப்பாடே சாப்பிடுகிறேன்.இப்போது எனக்கு ஆகாரம் வேண்டாம்.நான் சீக்கிரம் சமையலானதும் சாப்பிடுகிறேன்." என்று வெகு மரியாதை யோடு கூறினுர். அதைக்கேட்ட தாயார் அதற்குமேல் எதையும் சொல்லாமல் அவ்விடத்தைவிட்டுப் போய் விட்டாள்-

பிறகு ஜெமீந்தார் பேபரைப் பார்த்துக் கொண்டே வருகையில் அதில் பெரிய எழுத்துகளாலான தலைப்பில், கீழ் வருமாறு எழுதப் பட்டிருந்தது:—

அனியாயம்! அனியாயம்! ஜேகமேங்கும் புகழ்பெற்ற
துப்பறியும் நிபுணரான ராஜாராம் நாயுடுவிற்கு நேர்ந்தவிபத்து.

என்பதைப் படிக்கும்போதே ராமாமிருதம் திடுக்கிட்டுப் போனர். "என்ன ஆச்சரியம்! நேற்று நம்மோடு பேசிவிட்டுத்தேறுதல் சொல்லிச் சென்ற வீரதீர பராக்கிரமம் நிறைந்த புலிக்கு என்ன ஆபத்து வந்து விட்டதோ" என்று எண்ணியவாறு பதறப்பதறக்கீழே இருக்கும் சேதியைப் படிக்கலானர்.

"நேற்று ராத்திரி புறப்பட்ட கல்கத்தா மயில் நெல்லூருக் கருகில் போய்க் கொண்டிருக்கையில் நடு மத்தியில் ஒருவரை யாரோ கீழே உருட்டி விட்டார்களாம். அதே சமயம் எதிர்ப் பக்கம் வந்த வண்டியும் வெகு விசையாய்ச் சென்றதாம். அதை எதிர் வண்டியின் எஞ்சின்ட்ரைவர்கண்டு வண்டியைப் பிறகு நிறுத்தி அந்த வண்டியையும் நிறுத்தச் செய்தாராம். அங்கே விழுந்த மனிதரையார் தள்ளினர்கள் என்ற தகவல் தெரியவில்லையாம். அங்கு உடனே கும்பல் கூடி விழுந்தவருக்கு அருகில் வந்து பார்த்தால் சிலர் அவரை "ஆ! துப்பறியும் ராஜாராம் நாயுடு இவர்" என்று கூறுகிறார்களாம். அவருக்குப் பலத்த அடிபட்டிருக்கிறதாம். அவர் பிழைப்பதரிதென்று சென்னை ஜனரல் ஆஸ்பத்திரியில் டாக்டர் சொல்லுகிறாரும். அவரை அடுத்த ஸ்பெஷல் வண்டியில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்திருக்கிறர் கள். விவரம் பிறகுவரும்" என்றதைப் படித்த வுடனே! "ஹா! என்ன திர்ஷ்டம் அவருக்கும் வீசிவிட்டதா." என்று கதறிக்கொண்டே நிலத்தில் சாய்ந்து விட்டார். அவர் இட்ட கூச்சலைக்கேட்ட அவர் தாயும் மற்றவர்களும் வந்து அப்படியே கதிகலங்கி நின்றுவிட்டார்கள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182825
சென்னை-600 008

எமது ரேஜிஸ்டார்ட் லேடி டிரேட் மார்க் போட்டிருக்கும் புஸ்தகம் பார்த்து வாங்குங்கள் ! !

# ஆங்கில ஆசான்

60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக் கொள்ளலாம்.

இதுவரையில் இம்மாதிரியான புத்தகம் வெளிவரவில்லை. இது இங்கிலீஷ் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக்கொள்ளக்கூடிய சுலபமான தமிழில் நன்ருய்த் திருத்தப்பட்டு 5-ம் பதிப்பாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. உடனே எழுதுங்கள். விலை ரூ. 2

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் உபாத்தியாய ரில்லாமல் தெரிந்து கொள்ளலாம். ஒரு இங்கிலீஷ் சொல்லை உச்சரிக்கும் விதமும் அதன் அர்த்தமும், மிருகம், பட்சி, கிழமை, மாதம், வருடம், புஷ்பம், ஆயுதம், ஊர்கள் முதலியவற்றின் பெயர்களும், கடிதம் எழுதுதல், உயில், பத்திரங்கள், கல்யாண, சீமந்த, கருமாதி கோடீஸ்கள் முதலியன இங்கிலீஷிலும், தமிழிலும் எழுதும் விதமும், சிறு கதைகளும், பழமொழிகளும் அவற்றின் அர்த்தமும் வெகு சுலுவான நடையில் விளக்கப்பட்டிருக்கின்றன. மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் கட்டாயம் தேவை.




பினங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினுல் தான் புஸ்தகம் அனுப்பப்படும். கவனிக்கவும். சேட்லாக் இனம்.

**தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலை தெருவு,**
*மின்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.*

---

## வடிவூர் கே. துரைசாமி ஐயங்கார் பி. ஏ. யால்

எழுதப்பட்ட அற்புதமான நாவல்கள்.

| | |
|---|---|
| கனகாம்புஜம் அல்லது கள்வனும் விலைமகளும் | 0 12 0 |
| மாயாசுந்தரி | 0 12 0 |
| வஸந்த கோகிலம் (நாடகம்) | 1 0 0 |

## ஜெகன் மோகினி ஆபீஸ்,

**26, தேரடித்தெரு,**
**திருவல்லிக்கேணி மதராஸ்.**

# சிறிஸ்மஸ் புது வருட பண்டிகைகளில்

## பரிசளிக்கத் தகுந்த சாமான்

இச்சஞ்சிகை சந்தாதாரர்களுக்குமட்டும் இக்குறைந்த விலை.


கடியாரங்களின் விலைகள் குறைக்கப்பட் டிருக்கின்றன.

முந்துங்கள் ! முந்துங்கள் !! முந்துங்கள் !!!

**எல்லா கடிகாரங்களுக்கும் 5 வருஷம் உத்தரவாதம்**

**22 காரட்டு ரோல்டுகோல்டு கை கடியாரங்கள்**

**பட்டு பட்டையுடன் நன்றாய் உழைக்கக்கூடியது.**



NO. 505, Rs. 10.



NO. 507, Rs. 12.



NO. 518, Rs. 10.



NO. 511, Rs. 11.



NO. 517, Rs. 13.



NO. 510, Rs. 13.

நேர்த்தியான வேலைப்பாடுள்ளது

சரியான காலத்தைக் காட்டக்கூடியது.

உடனே எழுதுங்கள்.

ஒவ்வோர் கடியாரத்துடனும் ஓர் உயர்ந்த பவுண்டன் பேனு இனாமாக அனுப்பப்படும்.

விலாசம் :— **பீட்டர் வாட்ச் கம்பெனி,**

போஸ்ட் பாக்ஸ் நெ. 27

மதராஸ்.

PRINTED AT THE NOBLE PRESS, TRIPLICANE, MADARS, S. 1.